ஜூன் 2013 June | இதழ் 269 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest








23 வது ஆண்டில்
23rd Year

Growing with the Community
ESTD 1991

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — From the Editor

# வீர மண் வீதி!

கனடாவில் அண்மைக் காலத்தில் தமிழர்கள் செழித்து வாழும் நகரங்களில் ஒன்றாக மார்க்கம் மாற்றம் பெற்றுள்ளது.

ஈழத்தமிழர் சமூகத்திலிருந்து முதலாவது நகரசபை உறுப்பினராக லோகன் கணபதியையும், முதலாவது கல்விச்சபை உறுப்பினராக நீதன் சண்ணையும் கனடிய மண்ணில் தெரிவு செய்த பெருமை இந்த நகரத்துக்கேயுண்டு.

2009 முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு எதிரான தீர்மானம், ஜனவரியை தமிழர் மரபுரிமை மாதமாகப் பிரகடனம் செய்தமை என்று பல 'முதலாவது'களுக்கு வித்திட்ட மார்க்கம் நகரசபை, கடந்த மாதம் இன்னொரு வரலாற்றுப் பதிவை நிகழ்த்தியுள்ளது.

'வன்னி வீதி' திறப்பு விழாவையே இங்கு குறிப்பிடுகின்றோம். இங்குள்ள பதினான்காவது அவினியுவில், புதிய சமூக மன்றம் மற்றும் புதிய நூலகம் ஆகியவற்றுக்குச் செல்லும் புதிய பாதைக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் நின்று செயற்பட்டு வெற்றிகரமாக இப்பணியை நிறைவேற்றிய நகரசபை உறுப்பினர் லோகன் கணபதியைத் தமிழர் சமூகம் ஒருபோதும் மறவாது. இவருக்கு ஒத்தாசையாகவிருந்த நகர முதல்வர், மற்றும் சக உறுப்பினர்களை தமிழர் சமூகம் நன்றியுடன் நினைவில் இருத்துகிறது.

வன்னி என்பது ஈழத்தின் வீரம் செறிந்த மண். பண்டாரவன்னியன் ஆட்சியின் பின்னர், பிரபாகரன் என்ற ஈழவனால் மூன்று தசாப்த தமிழ் அரசாட்சி நடத்தப்பட்ட தாயக பூமி இது.

இந்த மண்ணைச் சூறையாடி, சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு, விகாரைகளை நிறுவி, சுத்த தமிழ்க் கிராமங்களுக்கும் வீதிகளுக்கும் சிங்களப் பெயரை மகிந்த ஆட்சி சூட்டி மகிழ்ந்து வரும் வேளையில்....

மூன்று லட்சம் வரையான தமிழர்கள் மட்டுமே வாழும் கனடாவில் அவர்களின் உணர்வுகளை மதிக்கும் வகையில் 'வன்னி வீதி' என்ற பெயரைச் சூட்டிய மார்க்கம் நகரசபைக்கு உலகம்வாழ் முழுத்தமிழரும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள்.

கொழும்பில் தமிழர்கள் நிறைந்து வாழும் வெள்ளவத்தையிலுள்ள 57வது ஒழுங்கையில் 'கொழும்பு தமிழ்ச் சங்கம்' அமைந்துள்ளது. 1942ல் உருவான இச் சங்கம் கடந்தாண்டு எழுபது வருட பூர்த்தியைக் கொண்டாடியது.

இதனை நினைவுகூரும் முகமாக, இந்த ஒழுங்கைக்கு 'தமிழ்ச் சங்க வீதி' என்று பெயர் சூட்டும் தீர்மானம் கொழும்பு மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டும், அதனைச் செயற்படுத்த விடாது பாதுகாப்பு அமைச்சு தடுத்துள்ளது.

ஆனால், பன்மைப் பண்பாடு பேணப்படும் கனடாவில் 'வன்னி வீதி' திறக்கப்பட்டது சிங்கள ஆட்சியினருக்கு ஒரு படிப்பினையாக இருக்கும்.

மார்க்கம் காட்டிய பாதையில், தமிழர் புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு நாட்டிலும் திருமலை வீதி, யாழ் வீதி, மீன்பாடும் வீதி, மலையக வீதி என்று பல புதிய வீதிகள் திறக்கப்பட வேண்டும்.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்சர்வேடிவ் செனட்டர்களால் ஹாப்பர் அரசு நெருக்கடியில்!




கன்சர்வேடிவ் கட்சித் தலைவரும் பிரதமருமான ஸ்டீபன் ஹாப்பரால் செனட்டராக நியமிக்கப்பட்ட ஒருவர், நிதி சம்பந்தப்பட்ட விடயங்களில் தவறான வழிகளைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். மைக் டபி என்ற இந்த செனட்டர், செனட் சபை விடுமுறை காலத்தின்போது கட்சியின் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளையில் செனட் பணிக்கான கொடுப்பனவாக 90,000 டாலருக்கும் மேலான தொகையைப் பெற்றுள்ளார்.

ஆனால் இதனைத் திருப்பிச் செலுத்திய வேளையில் பிரதமர் அலுவலக தலைமை அதிகாரியிடமிருந்து அத்தொகையைக் காசோலையாக செனட்டர் மைக் டபி பெற்றுள்ளார். இந்த விடயம் பகிரங்கமானதையடுத்து சம்பந்தப்பட்ட தலைமை அதிகாரி பதவி விலகினார். இப்பணம் கடனாகக் கொடுக்கப்பட்டதா அல்லது கட்சியின் நிதியா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

சி.ரி.வி தொலைக்காட்சியில் நீண்ட காலம் ஊடகவியலாளராகப் பணியாற்றிய செனட்டர் டபி, கன்சர்வேடிவ் கட்சியில் நிதி சேகரிப்பாளராகவிருந்தவர். செனட்டராக நியமிக்கப்பட்ட வேளையில், தமக்கு ஒரு அமைச்சுப் பதவி வேண்டுமென இவர் எதிர்பார்த்ததாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியாக நடைபெற்ற இந்தச் சம்பவங்களை 'நிதி மோசடி ஊழல்' என்று எதிர்க்கட்சிகள் பார்க்கின்றன. பிரதமரின் அலுவலகமும் இதில் சம்பந்தப்பட்டிருப்பது ஒரு பாரதூரமான விடயமாகக் கருதப்படுகின்றது. ஆனால் இந்த விடயங்கள் எதுவுமே தமக்குத் தெரியாமலே நடைபெற்றதாக பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் கூறி வருகிறார்.

ஸ்டீபன் ஹாப்பரால் நியமிக்கப்பட்ட இன்னொரு (பெண்) செனட்டரும் நிதி சம்பந்தமான விடயத்தில் மோசடி செய்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவரும் முன்னர் தொலைக்காட்சியொன்றின் ஊடகவியலாளராகவிருந்தவர்.

# பெற்றோரை 'ஸ்பொன்சர்' செய்யும் குடும்ப மீளிணைவுத் திட்டம் மேலும் கடினமாக்கப்பட்டுள்ளது

## Tighter regulations for family Reunification Program

கனடாவில் நீண்ட காலமாக அமுலிலிருந்து வருகின்ற குடும்ப மீளிணைவு 'ஸ்பொன்சர்' திட்டம் மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளது. இதனால் பெற்றோரும் அவர்களின் பெற்றோரும் கனடாவிலுள்ள பிள்ளைகளுடன் இணைவது ஒரு சவாலாக மாறியுள்ளது.

கனடிய குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சர் ஜேசன் கெனியின் புதிய அறிவித்தல் கடந்த மாதம் பத்தாம் திகதி வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம், புதிய குடும்ப மீளிணைவு 'ஸ்பொன்சர்' விண்ணப்பங்கள் தற்காலிகமாக இரண்டு வருடங்களுக்கு நிறுத்தப்படுகின்றது. ஏற்கனவே தேக்க நிலையிலுள்ள விண்ணப்பங்களைப் பரிசீலித்து முடிவு காண வசதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனி 2014 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னரே குடும்ப மீளிணைவு 'ஸ்பொன்சர்' விண்ணப்பங்கள் ஏற்கப்படுமென்று அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார்.

'முதலில் வருபவருக்கு முதலாவது இடம்' என்ற முன்னுரிமை அடிப்படையில் ஒரு வருடத்துக்கு ஐயாயிரம் விண்ணப்பங்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் ஏற்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

The Conservative government has once more tightened the rules around immigration - this time changing the family reunification program to make it more difficult for parents and grandparents to be accepted.

New applications to the parent and grandparent program had been remporarily suspended for two years to deal with a substantial backlog of applications. Immigration Minister kason Kenney announced last month that applications will be accepted again starting January 01, 2014.

Only 5,000 applications a year will be accepted on a 'first come, first served' basis, so the system can get rid of substantial backlog, Kenney said.

எட்டு வருடங்களாகத் தேக்க நிலையிலிருந்த சுமார் 165,000 பெற்றாரின் 'ஸ்பொன்சர்' விண்ணப்பங்கள் 2011 செப்டம்பர் மாதத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. இந்த காத்திருக்கும் காலம் மூன்றரை வருடங்களாக தற்போது குறைக்கப்பட்டுள்ளதென குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மறுபுறத்தில், புதிதாக பரீட்சார்த்த அடிப்படையில் சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'சூப்பர் விசா' நிரந்தரமாக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் பெற்றோருக்கும் அவர்களின் பெற்றோர்களுக்குமாகவே கொண்டு வரப்பட்டது.

குடும்ப மீளிணைவு 'ஸ்பொன்சருக்கு', பொறுப்பேற்பவரின் வருமானத்தை முப்பது வீதத்தினால் அதிகரிக்கவும் முடிவாகியுள்ளது. உதாரணமாக - ஏற்கனவே கனடாவிலுள்ள நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமொன்று 55,000 டாலரை ஆகக்குறைந்த வருட வருமானமாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

அதே சமயம், இருபது வருடங்களுக்கு ஸ்பொன்சரில் வருபவரைப் பராமரிக்க வேண்டும். (தற்போது இக்கால எல்லை பத்து வருடங்கள் மட்டுமே என்பது கவனிக்கத்தக்கது).

மிக முக்கியமான கெடுபிடி மாற்றமாக, பெற்றோரின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகளாக அவர்களுடன் கனடா வரவிருப்பவர்களின் வயதெல்லை பதினெட்டு ஆக்கப்பட்டுள்ளது. முன்னர் இது 22 ஆகவிருந்தது. இந்த வயதெல்லை மாற்றம், தமிழரைப் பொறுத்தளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ மாகாணத்தில் நீண்ட காலமாக அமுலிலிருந்து வருகின்ற சுமார் 3.2 மில்லியன் வெள்ளை சிவப்பு நிறத்திலான 'ஓஹிப்' சுகாதார அட்டைக்குப் பிரியாவிடை அளிக்க மாகாண அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. அடுத்த ஐந்தாண்டுக்குள் இது பயன்பாட்டிலிருந்து நீக்கப்படும். ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இங்கு அறிமுகம் செய்யப்பட்ட ஒளிப்படத்துடன் கூடிய பச்சை நிற 'ஓஹிப்' அட்டையை அனைவரும் பெறவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. வைத்திய சேவை மோசடிகளைத் தடுப்பதற்கு புதிய அட்டை உதவுகின்றது.

கனடியர்களில் சுமார் மூன்று மில்லியன் ஆட்கள் சிறுநீரக (சலாசயம்) நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் இவர்களில் பலரும் அது தெரியாமல் வாழ்ந்து வருவதாகவும் 'கனடியன் மெடிக்கல் அசோஷியேஷன் ஜேர்னல்' தெரிவித்துள்ளது. கனடியர்களின் மொத்தத் தொகையில் இது சுமார் 13 வீதமாகும். சிறுநீரக நோயுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் நோயின் வேகம் அதிகரித்த பின்னரே அதனைக் கண்டுபிடித்து சிகிச்சைக்குச் செல்கின்றனர்.

கனடிய பிரஜாவுரிமைப் பரீட்சைக்கான கேள்வித் தாள்களை தனியார் குடிவரவு ஆலோசகர் ஒருவருக்கு விற்பனை செய்ததாக முன்னாள் பிரஜாவுரிமை நீதிபதி ஒருவருக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பிலிப் கெய்னர் என்ற நீதிபதியிடமிருந்து பெற்ற வினாத்தாள்களைப் பயன்படுத்திய அனைவரும் பிரஜாவுரிமைப் பரீட்சையில் இலகுவாக தேர்ச்சி பெற்றுள்ளனராம். இதனையடுத்தே வினாத்தாள்கள் வெளியே விற்கப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

கனடாவில் சில மாதங்களுக்கு முன்னர் பாவனைக்கு வந்த 'பொலிமரில்' தயாரிக்கப்பட்ட நூறு டாலர் தாளிலும் போலிகள் தயாரிக்கப்பட்டு சந்தைக்கு வந்துள்ளன. சில வாரங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ். கொலம்பியாவில் போலியான ஏழு நூறு டாலர் தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 'பொலிமர்' தாள்கள் பிரதி பண்ண முடியாதவை என்றும், இவற்றில் போலிகளைத் தயாரிக்க முடியாதெனவும் கனடிய வங்கியினால் அறிவிக்கப்பட்டிருந்ததாயினும், அதுவும் கச்சிதமாக முறியடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் கனடிய தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட சனத்தொகை புள்ளி விபரத்தின்படி, இங்கு இப்போது வசிப்போரில் ஐந்திலொரு பங்கினர் வெளிநாடுகளில் பிறந்தவர்களெனத் தெரியவந்துள்ளது. எண்ணுக்கணக்கில் இத்தொகை 6.6 மில்லியன் ஆட்களாவர். கனடிய மக்கள் தொகையில் 20 சதவீதமான இவர்களில் பெரும்பாலானவர்கள் தெற்காசியா மற்றும் சீன சமூகங்களைச் சேர்ந்தவர்கள். 200 வரையான இனங்களைச் சேர்ந்தவர்கள் கனடாவில் வசித்து வருகின்றனர்.

செவ்வாய்க் கிரகத்துக்கு பயணம் செய்வதற்கு முப்பத்தைந்து கனடியர்கள் முன்வந்து தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர். 'மார்ஸ்-வண்' என்னும் சர்வதேச நிறுவனம்செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்ல விரும்புபவர்களிடமிருந்து இரு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பம் கோரியிருந்தது. மொத்தம் எண்ணாயிரம் பேர் வரை உலகெங்கிலுமிருந்து விண்ணப்பம் செய்திருந்தனர். 2023ஆம் ஆண்டில் இங்கு மக்களைக் குடியேற்ற மேற்படி நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஸ்காபரோ பொது வைத்தியசாலை எதிர்பாராத நெருக்கடியொன்றைச் சந்தித்துள்ளது. இங்குள்ள பல பிரதான சிகிச்சைப் பிரிவுகளை அண்மையிலுள்ள வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்ற ஆலோசிக்கப்படுகின்றது. முக்கியமாக, பிரசவப் பகுதி பேர்ச்மவுன்ட் வீதியிலுள்ள கிறேஸ் வைத்தியசாலையுடன் இணைக்கப்படலாமென வைத்தியசால அதிகாரிகள் தெரிவித்தனர். பொதுமக்களிடமிருந்தும் வைத்தியசாலை பணியாளர்களிடமிருந்தும் இதற்குப் பலமான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

## ஒன்ராறியோ பாடசாலைகளில் இப்படியும் ஒரு பிரச்சனை!

ஒன்ராறியோவின் விற்பி என்ற இடத்திலுள்ள மெடோகிறஸ்ற் பாடசாலை கனடியப் பத்திரிகைகளில் முதற்பக்கச் செய்தியாக இடம்பெறுவதற்கு அதன் வருடாந்தப் புத்தகம் (year book) காரணமாகியுள்ளது. இந்தப் புத்தகத்தில் கர்ப்பிணி (pregnant), ஓரினச் சேர்க்கை (Gay) போன்ற சொற்பதங்கள் இடம்பெறுவதை பாடசாலை அதிபரும் உபஅதிபரும் தடைசெய்தமை ஒரு பிரச்சனையாகியுள்ளது. பிரித்தானிய மாகாராணியின் பேரன் வில்லியமின் மனைவி கேற் கர்ப்பிணியாகவிருப்பது, ஒன்ராறியோ முதலமைச்சர் கத்லீன் வின் நன்கறியப்பட்ட ஓரினச் சேர்க்கையாளர் போன்ற விபரங்கள் வருடாந்தப் புத்தகத்தில் இடம்பெற்றால், மாணவர்கள் அவைகளுக்கு விளக்கம் கேட்க நேரிடும் என்பதால் அவை தவிர்க்கப்பட்டதாக பாட-சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பேப் சப்வே நிலையம் ஜூன் 15 - 26 நாட்களில் மூடப்பட்டிருக்கும்

கிப்ளிங்-கென்னடி சுரங்கப் பாதையில் அமைந்துள்ள பேப் சப்வே நிலையம் இந்த மாதம் 15 முதல் 26ஆம் திகதி வரை திருத்த வேலைகளுக்காக மூடப்பட்டிருக்கு-மென ரி.ரி.சி அறிவித்துள்ளது. இந்த காலத்தில் விசேட பஸ் சேவைகள் இணைப்புக்கெனப் பயன்படுத்தப்பட-வுள்ளன. மேலதிக விபரங்களை ரி.ரி.சி இணையத் தளத்தில் காணலாம்.

## கடவுச்சீட்டு கட்டணம் அடுத்த மாதம் அதிகரிப்பு

கனடிய கடவுச்சீட்டுக்கான விண்ணப்பக் கட்டணம் அடுத்த (ஜூலை) மாதத்திலிருந்து அதிகரிக்கின்றது. ஐந்து வருடத்துக்கான விண்ணப்பக் கட்டணம் 87 டாலர்களிலிருந்து 120 டாலர்களாகின்றது. புதிய பத்து வருடங்களுக்கான கடவுச் சீட்டை 160 டாலர்கள் செலுத்திப் பெறலாம். உள்நாட்டில் வழங்கப்படும் சிறார்களுக்கான கடவுச்சீட்டின் கட்டணம் ஜூலையிலிருந்து 57 டாலர்களாகவிருக்கும். தொலைந்த அல்லது களவுபோன கடவுச்சீட்டுகளுக்குப் பதிலாக புதியதைப் பெற 120 டாலர்களுக்கு மேலதிகமாக 47 டாலர்களை - அதாவது 167 டாலர்கள் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்ராறியோ முதல்வர் கத்லீன்: அடுத்த கண்டங்களையும் தாண்டுவாரா?



கத்லீன் வின் தலைமையிலான ஒன்ராறியோவின் லிபரல் சிறுபான்மை அரசாங்கம், அதன் முதலாவது நம்பிக்கை வாக்கெடுப்பில், ஆன்ட்றியா ஹாவார்ட்டின் என் டி. பி வழங்கிய ஆதரவினால் கவிழாமல் தப்பியது. வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது,

மே மாதம் 29ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பில் லிபரல் அரசுக்கு ஆதரவாக 65 வாக்குகளும், எதிராக 36 வாக்குகளும் கிடைத்தன. ரிம் குடாக் தலைமையிலான கன்சர்வேடிவ்வின் 36 பேரும் அரசுக்கு எதிராக வாக்களித்தனர்.

ஒன்ராறியோ மாகாண அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் என் டி. பி கோரிய முக்கிய அம்சங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டதால், கத்லீன் வின்னை ஆதரிக்கும் நிலைக்கு என் டி. பி தள்ளப்பட்டுள்ளது. வாகனக் காப்புறுதியின் பதினைந்து வீதக் குறைப்பு, வீட்டுப் பராமரிப்புக்கு நிதி வசதி அதிகரிப்பு, இளையோர் வேலைவாய்ப்பு அதிகரிப்பு ஆகியவை என் டி. பி முன்வைத்த கோரிக்கைகள்.

'என். டி. பியின் பலவீனத்தில் கத்லீன் வின்னின் லிபரல் கட்சி பலம் பெற்றுள்ளது" என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளன்ர. இந்தப் போக்கு எதிர்காலத்தில் என். டி. பிக்கு ஆபத்தை ஏற்படுத்துமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து வரப்போகும் நெருக்கடிகளிலும் என் டி. பியின் ஆதரவு லிபரலுக்கு கிடைக்குமா என்பதை இப்போது உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. இதற்கிடையில், ஒன்ராறியோ மாகாண அரசு எச். எஸ். ரி வரியை 13 சதத்துக்கு மேலாக அதிகரிக்க ஒருபோதும் அனுமதி அளிக்கப்பட மாட்டாதென மத்திய அரசின் நிதியமைச்சர் பிளாகெட்டி அறிவித்துள்ளார்.●

## றொறன்ரோ மேயர் றொப்: தொடர்ந்து கலைக்கும் ஊடகங்கள்!



றொறன்ரோ மேயர் றொப் போர்ட் தொடர்ந்து பிரபல்யமான ஒருவராகி, தினசரி ஊடகங்களின் முதற் செய்தியாக மாறியுள்ளார்.

போதை வஸ்தை அவர் வேறு சிலருடன் சேர்ந்து பயன்படுத்தியதாக வெளியான காணொளியொன்று புதிய பிரச்சனையை அவருக்கு ஏற்படுத்தியதால் ஊடகங்கள் அவரைக் கலைக்க ஆரம்பத்துள்ளன.

ஒரு வார இழுத்தடிப்புக்குப் பின்னர் அவர் போதை வஸ்துக் குற்றச்சாட்டை மறுத்துள்ளாராயினும், அவரது அலுவலக தலைமை அதிகாரி உட்பட ஆறு ஊழியர்களை மே மாதம் 31ஆம் திகதிக்குள் அவர் இழக்க நேர்ந்துள்ளது. புதிய ஊழியர்களில் ஒருவராக கர்த்தினா சேவியர் பொன்னையா என்ற பெண் நியமனமாகியுள்ளார்.

மேயர் றொப் போர்ட் பதவி விலக வேண்டுமென்று சிலர் கோரியுள்ளனராயினும், அவர் அதனை மறுத்துள்ளார். மேயர் பதவிக்கு வருபவர் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுபவரென்பதால், அவரைப் பதவி நீக்கும் அதிகாரம் சபை உறுப்பினர்களுக்கு இல்லை.

நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே மேயரைப் பதவி நீக்க முடியுமென்று சட்டவாதிகள் தெரிவிக்கின்றனர். 2014 நவம்பர் வரை இவர் பதவியில் தொடர இடமுண்டு.

இதற்கிடையில், இவரது சகோதரரும் நகர சபை உறுப்பினருமான டக் போர்ட் சில வருடங்களுக்கு முன்னர் போதை வஸ்து விற்பனை செய்ததாக ஒரு குற்றச்சாட்டு திடீரென முன்வைக்கப்பட்டுள்ளது.●

## ஜஸ்ரின் ரூடோவின் லிபரல் கன்சர்வேடிவ் தொகுதியை கைப்பற்றியது!



கனடிய லிபரல் கட்சியின் புதிய தலைவராக ஜஸ்ரின் ரூடோ தெரிவான பின்னர் நடைபெற்ற முதலாவது இடைத் தேர்தலில், கன்சர்வேடிவ் ஆசனமொன்றை லிபரல் கட்சி கைப்பற்றியது.

லப்ராடர் தொகுதி எம்.பியாவும், ஸ்டீபன் ஹாப்பர் அரசில் அமைச்சராகவுமிருந்த பீட்டர் பெனாசு தேர்தல் செலவு நிதி தொடர்பான விடயத்தில் பதவி துறந்ததால் இங்கு இடைத் தேர்தல் நடந்தது.

இடைத் தேர்தலில் அவர் மீண்டும் போட்டியிட்டாராயினும், லிபரல் வேட்பாளரான யோன் ஜோன்ஸ் வெற்றி பெற்றார்.

கடந்த மாதம் 14ஆம் திகதி பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண சபைக்கு நடைபெற்ற தேர்தலிலும் லிபரலே வெற்றி பெற்றது. இங்குள்ள 85 தொகுதிகளில் 50 லிபரலுக்குக் கிடைத்தது. ஆனால் லிபரலின் தலைவி கிறிஸ்ரி கிளாக் தமது தொகுதியில் தோல்வியடைந்தார். இங்கு என். டி. பி 33 இடங்களில் வென்றது. கன்சர்வேடிவ்வுக்கு ஒன்றுமில்லை.●

## ஒன்ராறியோ அமைச்சர் ஹரிந்தர் பதவி விலகினார்



கத்லீன் வின்னை முதலமைச்சராகக் கொண்ட ஒன்ராறியோ லிபரல் அரசின் அமைச்சர்களில் ஒருவரான ஹரிந்தர் தக்கார், தமது உடல் நலமின்மை காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து கடந்த முற்பகுதியில் விலகினார்.

இவரது அரசாங்க சேவைகள் அமைச்சுப் பதவியை ஜோன் மிலொய் பொறுப்பேற்றுள்ளார். சீக்கிய சமூகத்தைச் சேர்ந்தவரான ஹரீந்தர், கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களில் ஒருவர்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Immigration dramatically changing makeup of Toronto and Canada

New data from the 2011 National Household Survey highlight the changes unfolding in Canadian society. Canada has 200 ethnic groups and 100 religions. New data from Statistics Canada show that one-in-five in Canada is foreign-born.

The Greater Toronto region is growing more diverse as immigration brings changes to religious practices, languages and the faces of its residents.

New data released last month from the 2011 National Household Survey highlight the changes unfolding in Canadian society:
One in five is now foreign-born, the highest proportion among G8 countries; The country has 200 ethnic groups and 100 religions; About 6.3 million people — 19 per cent of Canada's population — count themselves a member of visible minority group.

"Canada is as diverse as it has ever been," said Tina Chui, chief of immigration and ethno-cultural statistics at Statistics Canada.

"Diversity plays out differently across the country. When you look at the immigrant population in Montreal, the makeup is very different from those in Toronto and Vancouver," Chui.

*New data from the 2011 National Household Survey highlight the changes unfolding in Canadian society. Canada has 200 ethnic groups and 100 religions.*

Nowhere is that evolving change more starkly illustrated than Markham, which at 72.3 per cent, has the highest proportion of visible minorities than any other city in the country, according to Statistics Canada.

Other GTA communities weren't far behind: Brampton (66.4 per cent); Mississauga (53.7 per cent); and Toronto (49.1 per cent), according to data from the 2011 National Household Survey.

In 2011, Canada had a foreign-born population of about 6.8 million people, about 20.6 per cent of the total population, the highest proportion among G8 nations.
Between 2006 and 2011, about 1.2 million foreign-born people immigrated to Canada.

Most recent immigrants came from Asia and the Middle East while numbers from Africa, Caribbean, Central and South America have also increased.

The 2011 survey counted about 2.5 million immigrants in the Toronto region, accounting for 46 per cent of the region's population. Of all immigrants in Ontario, seven out of 10 lived in Greater Toronto.

And the region remained a magnet for recent immigrants with 381,700 newcomers settling in Toronto — 32.8 per cent of all those who arrived in Canada between 2006 and 2011.

And increasingly those newcomers count themselves as a member of a visible minority group. Almost one in five individuals in 2011 identified themselves as a member of a visible minority group, up from 13.4 per cent a decade earlier and 4.7 per cent in 1981. South Asians, Chinese and blacks were the largest visible minority groups, accounting for 61 per cent of the visible minority population.

Of the 6.3 million people who said they were a visible minority, 31 per cent were born in Canada and 65 per cent were immigrants.

Statistics Canada attributes the boost in visible minorities to the increasing numbers of immigrants from non-European countries — 82.4 per cent.
Indeed, the survey drives home the shifting trends in immigration as Asia, Middle East, Caribbean, Central and South America all replace Europe as the main source for Canada's immigration.

Ontario remains the province of choice with 3.6 million immigrants — just over half of all newcomers to Canada — calling it home.

Of the 1.2 million immigrants who arrived between 2006 and 2011, nine out of 10 settled in Ontario, Quebec, British Columbia and Alberta. Just over 43 per cent of them choose to settle in Ontario.

But Ontario's share dropped while other provinces like Manitoba, Alberta, Saskatchewan and the Maritimes all saw increases in immigrant settlement. Numbers appear to show a trend that immigrants are choosing to live in regional centres such as Halifax, Winnipeg and Saskatoon.

"New immigrants are now settling in Quebec and the Prairie provinces," Chui said. "There is a shift of where immigrants settle."

In this first tranche of data from the 2011 survey, Statistics Canada released information about the citizenship, visible minorities, place of birth, ethnic origin, religion, aboriginal peoples and language. Other releases in the months ahead will examine labour, education, workplaces, migration, income, earnings and housing.

Canada's immigrants reported close to 200 countries as a place of birth. Among immigrants who arrived between 2006 and 2011, roughly 661,600, or 56.9 per cent, came from Asia and the Middle East. That compares with just 8.5 per cent of immigrants who settled in Canada prior to the 1970s.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# வன்னி வீதி

கடந்த மாதம் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. கனடாவில் நான் வசிக்கும் மார்க்கம் நகரசபையின் கூட்டத்தில் அது நடந்தது. நகரபிதா ஸ்கெப்பட்டியும் அங்கத்தவர் லோகன் கணபதியும் உணர்ச்சியுடன் உரையாற்றினார்கள். இறுதியில் ஒரு புது ரோட்டுக்கு நகரசபை 'வன்னி வீதி' என்று பெயர் சூட்டியதும் கூடியிருந்த மக்கள் ஆரவாரம் செய்து கைதட்டி தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்தார்கள். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு.

உலகில் இரண்டாவது பெரிய தேசமான கனடாவில் முதல் முறையாக ஒரு வீதிக்கு தமிழ் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னர் இப்படி ஒரு சம்பவம் நடக்கக்கூடும் என்பதை நினைத்துக்கூட பார்த்திருக்க முடியாது.

திரு லோகன் கணபதியின் முயற்சியால் 2012ம் ஆண்டு தொடங்கி வரும் எல்லா வருடங்களிலும் 14 ஜனவரி தமிழர் பாரம்பரிய நாள்/புது வருடம்/தைப்பொங்கல் எனப் பிரகடனப்படுத்தியது தெரிந்ததே. அதைத் தொடர்ந்து இது நடந்திருக்கிறது.

வன்னி வீதியில் சனசமூக நிலையம், நூலகம் மற்றும் பூங்கா போன்றவையும் விரைவில் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள். கனடாத் தமிழர்களுக்கு இது வன்னி நிலத்தை நினைவூட்டியபடியே இருக்கும்.

வன்னிப் பிரதேசம் இலங்கையின் ஒரு பகுதி. போர்த்துக்கீசியர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது கூட வன்னி ஆட்சியை பிடிக்க முடியவில்லை. 2000 சதுர மைல் நிலப்பரப்பை பண்டார வன்னியன் ஆட்சி செய்தான். 1803ம் ஆண்டு காக்கை வன்னியன் சதியில் அவன் பிரிட்டிஷாரிடம் தோல்வியுற நேர்ந்தது. அவனைத் தோற்கடித்த ஆங்கிலத் தளபதி பண்டார வன்னியனின் வீரத்தை பாராட்டி அவனுக்கு சிலை அமைத்தான் என்பது வரலாறு.

சமீபத்தில் 'வன்னி யுத்தம்' என்ற நூல் வெளிவந்திருந்தது. இதை எழுதியவர் பெயர் அப்பு. வன்னியில் யுத்தம் ஆரம்பித்ததி - லிருந்து இறுதிவரை அங்கே இருந்தவர். பலமுறை இடம் பெயர்ந்தார். யுத்த காலத்தில் நாட்குறிப்புபோல தினம் அங்கே நடந்த சம்பவங்களை நூலில் பதிந்திருக்கிறார்.

ஓர் இடத்திலே வீதியிலே இருவர் உரலில் ஏதோ இடித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் ஒரு பெண் சுளகில் புடைத்தபடி இருந்தார். அந்த மூவரையும் சுற்றி இரண்டு ஆண்கள், ஒரு பெண் கதைத்துக்கொண்டு நின்றார்கள். சுற்றிலும் நடந்த போர் அவர்களில் ஒரு மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. தொடர்ந்து இடித்துக்கொண்டும் கதைத்துக் கொண்டும் இருந்தார்கள். போரின் கடைசிக் கட்டத்தில் சனங்களுக்கு எல்லாமே பழகிவிட்டது. குண்டு விழுவதோ ஆட்கள் சாவதோ ஒன்றும் பெரிய விசயமே இல்லை.

அடுத்த கணம் என்ன நடந்ததென்பதை ஆசிரியர் தன் வார்த்தைகளில் கூறுகிறார். 'திடீரென எங்கிருந்தோ ஓர் எறிகணை சீறிக்கொண்டு வந்து உரலில் இடித்துக்கொண்டு இருந்தவர்கள் மத்தியில் வீழ்ந்து வெடித்தது. என் கண்ணுக்கு முன்னால் இருந்த ஆறு பேரும் அப்படியே வீழ்ந்தார்கள். அவர்களது தறப்பாள் கொட்டிலுக்கு முன்னால் இருந்த தேநீர்க் கடை வாசலில் நின்றவர்கள் அப்படியே பின்வளமாக வீழ்ந்தார்கள்.' சகல வளங்களுடனும் இருந்த வன்னிப் பிரதேசம் எப்படி நாளுக்கு நாள் நிலத்தை இழந்து கடைசியில் வீழ்ந்தது என்பதை படிப்படியாக விவரிக்கும் நூல்.




'குமுதம்' சஞ்சிகையின் 2013 மே, 29 இதழில் வெளியான இந்தக் கட்டுரை நன்றியுடன் இங்கு மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

2ஆம் பக்கமும் 18ஆம் பக்கமும் பார்க்க

என் வீடு மார்க்கம் நகரில் இருக்கிறது. அங்கே நிறைய வகை வகையான மரங்கள் உள்ளன. 'வன்னி வீதி' என் வீட்டுக்கு சமீபமாக அமைந்திருக்கிறது. என் வீட்டைச் சுற்றி இருக்கும் வீதிகளின் பெயர்களில் பெரும் ஒற்றுமை உண்டு. ரெட் ஆஷ் (red ash), பிளாக் வால்நட் (black walnut), வைட் செடார் (white cedar). எல்லாமே மரங்களின் பெயர்கள். இப்பொழுது நாலாவது பக்கத்துக்கு வன்னி வீதியும் வந்துவிட்டது. வன்னி பூப்பூக்கும் மரம். பாண்டிய மன்னர்களின் குலமரம்.

நீரில்லாத பாலைவனங்களிலும் 400 வருடங்கள் வாழக்கூடியது. பன்னிரெண்டு வருட வனவாசத்தை முடித்துவிட்டு பாண்டவர்கள் மாறுவேடத்தில் விராடனுடைய ராச்சியத்துக்குள் அஞ்ஞாதவாசத்தை கழிக்க நுழைந்தபோது தங்கள் ஆயுதங்களை மூட்டையாகக் கட்டித் தொங்கவிட்டது ஒரு வன்னி மரத்தில்தான். யுத்தத்தை நிறுத்தி வைப்பதற்காக அல்ல; தள்ளிவைப்பதற்கான ஒரு குறியீடு வன்னி மரம்.

இனிமேல் நான் எங்கு புறப்பட்டாலும் வன்னி வீதியை கடந்துதான் போகவேண்டும், வரவேண்டும். ஆகவே நாளாந்தம் வன்னி வீதியை பார்ப்பேன். இந்த வீதியில் காவல் அரண் கிடையாது. கிரிஷாந்திகள் தினம் பயமின்றி இதைத் தாண்டி பள்ளிக்கூடம் செல்லலாம். வீதியிலே குண்டு விழும் அபாயம் கிடையாது. நல்ல கோடைகால நிழலில் வீதி ஓரத்தில் உரலில் நெல்லுக் குத்தலாம் சுளகிலே புடைக்கலாம். இசைப்பிரியா போன்ற ஒலிபரப்பாளர்கள் பயமின்றி வீதியில் நின்று ஒலிபரப்பு செய்யலாம்.

இது எங்களுக்கு சொந்தமான வீதி. (மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன்



# மனமே! நலமா?

32

மனம் என்பது ஒரு செயற்பாடு. எம்மீது ஆதிக்கம் செலுத்துவது அது. மனத்தில் ஓர் எண்ணம் வந்துவிட்டால் அது நம்மை எப்படியெல்லாமோ ஆட்டிப் படைக்கிறது பாருங்கள். இதனால்தான் மனத்தினை கட்டுப்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறோம். நாம் எந்த நினைவு வரக்கூடாது என்று எண்ணுகிறோமோ அதே நினைவுதான் மீண்டும் மீண்டும் வந்து பாடாய்ப் படுத்துகிறது. எதை மனதில் நிறுத்த வேண்டும் என நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென நினைக்கிறோமோ அது நிற்பதில்லை! மனதினை நல்வழிப்படுத்தினால் செய்ய முடியாததொன்றில்லை.

மனம் உன்னதமான நிலையில் இருக்கும்போது, நமது முழு ஆற்றலும் வெளிப்படுகிறது. அதனால் மனம் வைத்து செய்தால் முழுத்திறமையும் பரிமளிக்கிறது. சிலவேளைகளில் ஒத்துழைக்கும் மனம் சிலவேளைகளில் நழுவியும் விடுகிறது. நமக்கு திறமை இருந்தும் அது சமயத்திற்கு கைகொடுக்காமல் தவிக்கிறோம்.

மனம் போன போக்கிலே கால் போகலாமா? இப்படியும் ஒரு பாடல் வரி உள்ளது. உண்மையில் மனம் போனபோக்கில் கால் போகத்தான் செய்யும். அந்த அளவுக்கு மனம் நம் நடவடிக்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது.

உடலுக்குள் புதைந்து கிடக்கும் மனம் உடல் மாற்றங்களாலும் பாதிப்புறக் கூடும். அதேபோன்று மனதில் ஏற்படும் மாற்றங்கள் உடலை பாதிப்புறச் செய்யும். ஒன்றிலொன்று தங்கியுள்ள அற்புதம் இது. ஒரு பொருளைப் பார்த்தவுடன் சாப்பிட வேண்டும் என வாயூறி நிற்கும் நிலையில் நுணுக்கமான பந்தம் மனதிற்கு ஏற்பட்டு விடுகிறது. சாப்பிட முன்பே வாயூறி நிற்பது இதனால்தான். ஒருவருக்கு மனம் சரியாக இல்லையென்றால் எதனையும் செய்ய முடிவதில்லை. இதனை நாம் மூட் (Mood) என்றாலும் அது ஒரு மனநிலை (State of mind) ஆகும். வெற்றியும் தோல்வியும் உண்மையில் மனதின் இருபக்கங்களேயாகும்.

நாம் மனதினை கட்டுப்படுத்துவது எவ்வாறு என்பதனை அறிந்து கொள்ள வேண்டும். நாம் உள்வாங்கும் தகவல்களை கட்டுப்படுத்துவதின் மூலமே எண்ணங்களைக் கட்டுப்படுத்தலாம். எண்ணங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் செயல்களைக் கட்டுப்படுத்தலாம். செயல்கள் மூலம் விளைவுகளை கட்டுப்படுத்தலாம். மனம் என்பது ஒரு தொழிற்சாலை போன்றது. இது 24 மணிநேரமும் எண்ணங்களை தயார் செய்ய வல்லது. நாம் உட்கார்ந்திருக்கும்போது, நடக்கும்போது, ஏன் தூங்கும்போதுகூட நாம் ஏதாவது யோசித்துக் கொண்டிருப்போம். ஒரு பிள்ளையைகூட ‘நீ ஒரு முட்டாள், உதவாக்கரை’ என்று சொல்லி வந்தால்கூட பிள்ளையின் மனம் பேதலித்து விடுகின்றது. குழந்தையின் மூளை வெற்றுப் பலகை போன்றது. இப்படியான சொற்கள் நன்றாக படிந்து விடுகின்றன. எமது ஐம்புலன்களும் எமது தகவல் மையமாக அமைந்து தகவல்களை சேகரிக்கின்றன. எனினும் பார்வை, கேள்வி, உணர்வு மூலம் 85 சதவீதமான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

நாம் இரவில் தூங்கப் போகும்போது மனதிற்கு ஊக்கமளிக்க கூடிய ஒரு பாடலை ரசித்து, கேட்டுவிட்டு படுத்தால் நிம்மதி தோன்றும். ‘எங்குமே ஆனந்தம், ஆனந்தமே ஜீவனின் மகரந்தம்’ என்ற ஒரு பாடலே போதும். ஆனந்தமாய் நித்திரை செய்யலாம்.

மீண்டும் தொடர்வேன்...

## வன்னி வீதி..

இதன் பெயரை ‘வலகம்பாகு ஹந்தியா’ என மாற்ற முடியாது. ‘இறந்த வீரனின் நடுகல் ஒன்றுதான் தெய்வம். வேறில்லை’ என்று புறநானூறு சொல்லும். அப்படியான மாவீரர் துயிலும் இல்லத்தை சிதைத்தது-போல இந்த வீதியை ஒன்றும் இலகுவாக சிதைக்க முடியாது. நூலகத்தை எரித்தது போல இதை அழிக்க முடியாது.

இது என்றென்றைக்குமாக கனடாவில் ஈழத் தமிழரின் வரலாற்றை நினைவுபடுத்திய-படியே நிற்கும். வன்னி வீதி.●

## வீடு விற்பனைச் சந்தை கனடாவில் மந்தமாகிறது

கனடாவில் கடந்த வருடம் ஜுலை மாதத்தில் அடமானக் கடன் விதிகள் இறுக்கமாக்கப்-பட்டதையடுத்து, வீட்டு விற்பனைச் சந்தையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனை நல்லதொரு அறிகுறியென்று மத்திய நிதியமைச்சர் பிளஹர்டடி தெரிவித்துள்ளார். வீடு விற்பனைச் சந்தை நேர்மையான பாதைக்கு திரும்புவதை இது உறுதி செய்வதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருதுகின்றனர். மறுபுறத்தில், ரொறன்ரோவில் கொண்டோக்களின் விலை சுமார் பத்து வீதத்தினால் அதிகரித்துள்ளது.

## சீனாவின் 135 கோடி மக்களில் 111 கோடி ஆட்களிடம் செல்லிடத் தொலைபேசி

சீனாவில் செல்லிடத் தொலைபேசி வைத்திருப்பவர்களின் தொகை 111 கோடியாக உயர்ந்துள்ளது. சீனாவின் தற்போதைய மக்கள் தொகை 135 கோடி. இங்குள்ள ஒவ்வொரு நூறு பேரில் 83 பேரிடம் செல்லிடத் தொலைபேசி உள்ளது. இதுதவிர, இங்குள்ள 56 கோடியே 40 லட்சம் மக்களிடம் இணையத்தள இணைப்புகள் உள்ளதாகவும் இவர்களில் 42 லட்சம் பேர் தங்களின் செல்லிடத் தொலைபேசியிலேயே இணையத் தளத்தைப் பயன்படுத்துகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலக்கண அறிவு வேண்டுமா?

இலக்கணம் படித்துவிட்டுத்தான் மொழியைப் பேச வேண்டும் என்பதில்லை. மொழி பேசக்கூடிய இடத்தில் வாழ்ந்தாலே, வளர்ந்தாலே போதும். மொழி என்பது ஓசைகளின் கூட்டம்தான். பல்வேறு ஓசைகளைக் காதால் கேட்கும்போது, அவற்றை நினைவில் வைத்து, மீண்டும் அதே ஓசைகளை எழுப்பும்போது, அது மற்றவருக்குப் புரிந்துவிட்டால் அது மொழி! எந்த ஒரு மொழியும் ஓசைகளில் ஒழுங்குதான் ஓசைகளின் அமைப்புத்தான். ஓசைகள் பிறக்கும், ஓசைகள் ஒலிக்கும், ஓசைகள் சேரும் நுட்பங்களை எடுத்துச் சொல்வதுதான் இலக்கணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# ஞாபகசக்தியும், பேனாவும், பேப்பரும்
# Memory + Pen + Paper

கற்றலில் முக்கியம் ஞாபகசக்தியே ஆகும். எவ்வளவு படித்தாலும் அதனைக் கிரகித்தும், பின் வாசித்த வற்றை ஞாபகத்தில் வைத்தால்தான் பரீட்சையில் வெற்றியடைய முடியும். பல மாணவர்கள் மணித்தியாலக் கணக்காக, நித்திரை இன்றி, உணவின்றி படிப்பார்கள். ஆனால் ஒன்றுமே ஞாபகத்தில் இருக்காது. பரீட்சை மண்டபத்தில் குழப்பமாக இருப்பார்கள். இவர்களைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருக்கும். நாங்கள் மாணவர்களாக இருந்த காலம் தொட்டு வாசித்துக் கொண்டு போகும் பொழுதே எங்கள் கைப்பட சிறு சிறு குறிப்புகளை எழுதி அதனை ஞாபகத்தில் வைத்தே பரீட்சைக்கு ஆயத்தம் செய்தோம். குவியல், குவியலாக இருக்கும் விடயங்களைப் பரீட்சைக்குப் போகுமுன் கிரகிக்க முடியாது. எங்கள் கைப்பட எழுதிய இந்த முக்கிய குறிப்புகளை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு போனால் பரீட்சை மண்டபத்தில் எல்லாமே நினைவுக்கு வந்துவிடும்.

இன்றைய மேலோட்டத்தில் அதிலும் வளர்ச்சியுற்ற இந்நாட்டில் தொழில்நுட்பச் சாதனங்களிலேயே மாணவர்களின் கற்றல் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் கற்பிக்கும் பொழுது மாணவர்கள் தம் கைகளாலேயே குறிப்புகள் (Notes) எழுதிய காலம் அருகி வருகிறது. வகுப்புகளுக்கே தமது மடிக் கணினிகளைக் கொண்டு சென்று ஆசிரியர் போதிப்பதை விசைப் பலகையை பாராமலேயே கட கட என தட்டச்சு எடுத்து விடுகிறார்கள். மேலதிக விபரங்களை அறிவதற்கும், உசாவுவதற்கும் ஆசிரியரே பல கணினி மையத் தொடர்புகளை (links) கூறுவார். இவ்விஷயத்தில் இன்றைய மாணவர்களில் பலர் குருவையும் மிஞ்சியவர்களாக உள்ளனர். உசாவும் பொழுது கூடப் பல மாணவர்கள் மேலெழுந்தவாரியாகவே வாசிக்கிறார்கள் (Browse). வாசித்தவற்றை கற்றை, கற்றையாக (Reams of paper) பிரதியெடுக்கிறார்கள். அதில் முக்கியமான விடயங்களை கோடு இடுகிறார்கள். இவற்றிற்கென விசேடமான பேனாக்களும் விற்பனையாகின்றன (Highlight). இவ்வாறு வேகமாக நடக்கும் இக்கற்றல் முறை ஞாபகசக்திக்குக் குந்தகமாகவே அமைகிறது.

ஆசிரியரின் வாயில் இருந்து வரும் எந்த ஒரு விடயத்தையும் ஒரு சொல் விடாமல் எழுதிய பழக்கம் இங்கும் ஒரு காலத்தில் இருந்தது. எமது நாட்டில் சில ஆசிரியர்கள் கடுகதிப் புகையிரதம் போல் மிகவும் வேகமாக கற்பிப்பார்கள். மாணவர்கள் குறிப்பு எழுத முடியாமல் திணறுவதைப் பார்ப்பதில் அவர்களுக்கு ஒரு சந்தோஷம். பல்கலைக் கழகங்களில் கூட இத்தகைய கற்பித்தல் நடைபெற்றது. ஆனால் ஆசிரியர் கூறுபவற்றை நாமே கிரகித்து பின்பு அதனை குறிப்புகளாக எழுதும் பொழுது அவை எமது மனதில் நன்றாகப் பதிந்தன. எப்பொழுது கற்றல் கணினி மயமாகியதோ அன்றே மாணவர்களின் கிரகிக்கும் தன்மையும் குறைந்துவிட்டது.

இன்றைய மாணவர்களின் கற்றல் முறை ஞாபகசக்திக்குக் குந்தகமாக அமைந்துள்ளது என ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. கையில் பேனாவைப் பிடித்து எழுதுவதன் மூலம் மூளையின் குறிப்பிட்ட பகுதிகளில் உணர்ச்சிகள் தூண்டப்படுதல் (stimulation) ஏற்படுகிறது. (Physical Act of holding a pen and writing stimulates critical activity in specific areas of the brain). இதனைப் பரீட்சிப்பதற்காக மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தனர். ஒரு குழுவிடம் கையினால் எழுத்துக்களை (Alphabets) எழுதும்படி பணித்தனர். மற்றைய குழுவிடம் கணினியில் எழுத்துகளைப் பார்த்து கிரகிக்கும்படி கூறப்பட்டது. பின் இக் குழு அங்கத்தவர்களிடம் அவர்கள் கற்றவற்றை ஞாபகப்படுத்தும்படி கேட்கப்பட்ட பொழுது கையினால் எழுதிப் படித்தவர்கள், கணினியில் வாசித்தவர்களிலும் பார்க்கப் பன்மடங்கு நன்றாகச் செயல்பட்டனர்.

Dr. Nick Whitehead (CEO and Founder of Oxford Learning) இது பற்றிக் கூறுகையில் "பலவகையான கற்றல் முறைகள் உள்ளன. ஆனால் பேனாவினால் பேப்பரில் குறிப்பு எழுதிப் படிக்கும் முறையே (Pen and paper study notes) என்றுமே சிறந்த கற்றல் முறையாக இருந்துள்ளதாகக் கூறுகிறார். இன்றைய தொழில்நுட்ப வசதிகள் நிறைந்த காலத்தில் குறிப்பு எழுதி படிக்கும் முறையை ஒரு பழமையான முறையாக மாணவர்கள் கருதலாம். (Old fashioned method). ஆனால் படித்தவற்றை கிரகித்து பின் பிரயோகிப்பதற்கு (recall) தேவையான ஞாபசக்தியை (Motor memory) இக் கற்றல் முறையே வழங்குகிறது. அது மாத்திரம் அல்ல இவ்வாறு குறிப்புகள் எழுதும் பொழுது மாணவர்கள் மிகவும் ஈடுபாட்டுடன் செயல்படுவார்கள் (Active Learning) முக்கியமான விடயங்களை கிரகித்து பின்பு அவற்றை சுருக்கி பக்கத்திலேயுள்ள (Margin space) இடத்தில் எழுதும் பொழுது சிந்தித்து செயலாற்ற வேண்டியுள்ளது.

இந்நாட்டு புள்ளிகள் வழங்கும் முறை வருடம் முழுவதும் நடைபெறும் அளவீடுகளின் கூட்டுத் தொகை என்பதை எல்லோரும் அறிவார்கள் (summative evaluation). வகுப்பில் நடைபெறும் ஒப்படைகள் மற்றும் சிறு சிறு பரீட்சைகளுக்கு 70% புள்ளிகளும், ஈற்றில் நடைபெறும் பரீட்சைக்கு 30% புள்ளிகள் மாத்திரமே வழங்கப்படுகின்றன. ஆகவே பெரிதாக பிள்ளைகள் ஒன்றும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. எல்லாவிதமான ஒப்படைகள், பரீட்சைகள் யாவற்றிற்கும் ஒரு விடயத்தைப் பற்றிய முக்கியமான விடயங்கள் யாவை என்பதை கிரகிக்கும் திறன் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். அதற்குச் சிறு குறிப்புகள் எழுதுவதே சிறந்த முறையாகும். அதனை விட்டு கணினியிலிருந்து பிரதி எடுக்கப்பட்ட பக்கங்களில் மனம்போன போக்கில் Highlight பண்ணினால் அது கற்றல் அல்ல. குறிப்பு எழுதுவதும் ஒரு கலை. முக்கியமான விடயங்களைக் கிரகித்து அவற்றை மிகவும் சுருக்கமாக எழுதத் தெரிதல் வேண்டும். அந்தச் சிறிய குறிப்பை பார்த்தவுடனேயே அது பற்றிய சகல விடயங்களும் ஞாபகத்திற்கு வரவேண்டும். ஞாபகத்திற்கு வந்த விடயங்களை வினாக்களுக்கு ஏற்ற வகையில் விடையில் புகுத்தும் திறன் நாளாவட்டத்தில் ஏற்பட வேண்டும்.

இக் கற்றல் முறைக்குத் தேவையானவை:-
ஒரு பேனாவையும், பேப்பரையும் எடுக்கவும் (Grab a paper and pen)
எல்லா குறிப்புகளையும் வாசித்து முக்கியமானவற்றை சிறு குறிப்புகள் எடுக்கவும் (Read all notes and write down the main points)
முக்கிய தலையங்கங்களையும், முக்கிய சொற்களையும் எழுதவும் (Write down subject headings and key words)
நினைவில் வைக்க கடினமான எண்ணக் கருக்களையும் விடயங்களையும் குறித்துக் கொள்ளவும். (Write down ideas and concepts that are the most challenging to remember)●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# விளிம்பு நடை

கோடையை கொண்டாடிக் குதுகலிக்கும் சாகசப் பெருமிதம் கனடிய தமிழ் இளைஞர்களிடம் வருடாவருடம் அதிகரிக்கின்றது.

நிலப்பரப்பிலிருந்து 116 மாடிகள் உயரத்தில் நடப்பதற்கு அவர்களது ஆர்வம் பரபரத்துப் பறப்பது - வியக்க வைக்கின்றது.

ரொறன்ரோ நகரின் அதி உயர்ந்த கனடிய தேசிய கோபுரத்தின் (C.N. Tower) உச்சியிலிருந்து கை வீசியபடியே சட்ட பூர்வமாக நடந்து ரொறன்ரோ நகரை முழுமையாகப் பார்ப்பது அவர்களுக்கு ஒரு வீர தீர விளையாட்டு. சுமார் ஒன்றரை மணி நேரம் இந்த விளையாட்டில் ஈடுபடும் இதயம் உள்ளவர்கள் 20 தொடக்கம் 30 நிமிடங்கள் விளிம்பில் நடக்கும் திகில் அனுபவத்தில் சிலிர்ப்பர்.

முதல் நாள் விற்பனையில் 41 வீதத்திற்கும் அதிகமானவை தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களாலேயே பெற்றுக்கொள்ளப்பட்டதாக கூறும் அறிக்கைகள் தமிழ் இனத்தையே அண்ணாந்து பார்க்க வைக்கின்றன.

எத்தனை நாளைக்குத்தான் தரையில் நடப்பது? அதனால் ஆபத்தே அருகில் வா என வம்பை விலைக்கு வாங்கி ஆகாயத்தில் அவர்கள் நடக்க முனைவது புல்லரிப்பை ஏற்படுத்தி பதறவைக்கின்றது.

கனடாவின் தனித்துவ அடையாளமாகத் திகழ்வது கனடிய தேசிய கோபுரம். 1976ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட இக் கோபுரம் 1815 அடிகள் (553 மீட்டர்) உயரமுள்ளது. உலகின் அதி உயர் கோபுரமாக 2010ம் ஆண்டு வரை 34 ஆண்டுகள் புகழ் பெற்றிருந்தது. அதன் பின்னர் சீனாவின் கன்ரன் கோபுரமும் (Canton Tower 2000 ft/600m) ஜப்பானின் ஸ்கைரீ கோபுரமும் (skytree 2080 ft/634 m) உயரத்தால் உயர்ந்தன. தற்பொழுது டுபாயின் பூரி ஹாலிபா கோபுரம்தான் (Buri Khalifa 2722ft/829m) உலகின் உயர் கோபுரமாகும்.

கனடிய தேசிய கோபுரம் (Canadian National Tower) கனடிய தேசிய புகையிரத நிறுவனத்தால் நிறுவப்பட்டது. அதனால் அப் புகையிரத சேவையின் பெயரை தனதாக்கியது. ஆனால் தற்பொழுது மத்திய அரசின் பராமரிப்பில் அது இருப்பினும் பெயர் மாற்றம் பெறவில்லை. கோபுரத்தில் பார்வையாளர்களுக்கென இரு பிரதம பகுதிகள் உள்ளன. 1135 அடி (346 மீட்டர்) உயரத்தில் சுழலும் சிற்றுண்டிச்சாலை மற்றும் வர்த்தக நிலையங்களுடன் ஒரு பிரிவு உள்ளது. அதற்கும் மேலாக 'பருந்துப்பார்வை'க் கென 1465 அடி (446 மீட்டர்) உயரத்தில் பிறிதொரு பிரிவு (SkyPod) உள்ளது.

2011ம் ஆண்டு விளிம்பு நடை கனடிய தேசிய கோபுரத்தில் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது. 1168 அடி (356 மீ) உயரத்தில் சுழலும் சிற்றுண்டிச்சாலைக்குச் சிறிது மேலாக அடிப்பகுதி கண்ணாடித் தகடுகளுடனும் விளிம்புகள் உலோக குழாய்களுடனும் உள்ள நடை பாதை உண்டு. உலக கோபுரங்களில் மிக உயர்ந்த இடத்தில் மனிதர் நடக்கக்கூடிய வசதி இங்கு மட்டுமே உள்ளது. நடந்து பறக்கவோ அல்லது பறந்து நடக்கவோ விரும்புபவர்களின் சொர்க்கம் இதுதான். அதன் விளிம்பிலிருந்து எட்டிப்பார்த்தால் மரணம் மெல்ல மனதில் எட்டிப்பார்க்கும். பணம் பாதாளம் வரை பாயும் என போதித்த வாத்தியார் எங்கோ தொலைந்து போவார். காற்று ஊதித்தள்ளினால் விழ்ந்து உடல் சிதற 10 நொடிகள் காணும் என்ற எண்ணம் இதயத்தை ஆக்கிரமிக்கும். கால்கள் கண்ணாடித்தரையில் பரவிடினும் அந்தரத்தில் அநாயாசமாக தொங்கும் உணர்வால் மயிர்கூச்செறியும்.
மார்பை மறைத்துள்ள கவசமும் முதுகில் கொளுவப்பட்டுள்ள உருக்கு சங்கிலியும்தான் பாதுகாப்பு.

இவ் வருடம் ஏப்ரல் மாதம்15 ம் திகதி ஆரம்பமான விளிம்பு நடை அக்டோபர் மாதம் 26 ம் திகதி வரை நீடிக்கும். காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை தினமும் இடம்பெறும். விளிம்பு நடையில் பங்கு பற்றுவதற்கு வரி உட்பட 175 டாலர்கள் செலுத்த வேண்டும். பார்வையாளர்கள் கட்டணம் 25.60 டொலர்கள். 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 4 முதல் 12 வயது வரை உள்ளவர்களுக்கும் 19.20.வரி பிறிம்பு.

கண்ணாடி கூண்டுக்குள் இருக்கும் பார்வையாளர்களுக்கு அதலபாதாளத்தில் வீழுந்துவிடுவோமோ என்ற உணர்வு அடிக்கடி தோன்றுமாம். ஆனால் கண்ணாடிக் கூண்டுக்கு வெளியே மேலே ஆகாயம் அண்மித்து விரிய கீழே தொலை துாரத்தில் நிலம் தெரிய நடப்பவர்களுக்கு அடுத்து என்ன சாதனை என்ற சிந்தனைதான் அதிரடியாக ஏற்படுமோ?

விளிம்பு நடைக்குச் சில நிபந்தனைகள் உள்ளன. 13 மேற்பட்ட வயது. 13 க்கும் 17 க்கும் இடையே வயது எனின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் எழுத்து மூலமான சம்மதம். 75 இறா (34 கிலோ) க்கு அதிகமான அல்லது 310 இறா (140 கிலோ) க்கு குறைந்த எடை. 42 அங் (107 செ.மீ) உயரம். ஆரோக்கியமான உடல் நிலை. உபகரணங்கள் இன்றி இயல்பாக நடக்கக்கூடிய திறன். பின்வரும் நிலையில் உள்ளவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும். போதையிலிருத்தல். கர்ப்பமாக இருத்தல். எலும்புகள் முறிவடைந்திருத்தல். 6 மாதங்களுள் சத்திர சிகிட்சைக்குட்பட்டிருத்தல். மூச்சு திணறல் அல்லது நெஞ்சு வலி உள்ளோர்.

இருக்கிறதை விட்டுவிட்டு பறக்கிறதுக்கு ஆசைப்படும் இளைஞர்களிடம் Skydive, Bungeejumping, Roller coaster போன்ற இதர சாகச விளையாட்டுகளிலும் திகில் மிக்கது Edgewalk என்பது தீவிரமடைகின்றது.

எனினும் வான் அளவு இலட்சியம் உள்ள இந்த இளைஞரின் சொர்க்கத்துக்கு செல்லும் பாதை நரகமாக உள்ளதாக தடுமாறும் பெற்றோரின் துயர் துடைப்பது எவ்விதம்?●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# சூல் கொண்ட பன்றியின் கருவறை

4

பலவகையான இடையூறுகளைக் கடந்து கட்டுநாயக்காவில் விமானம் ஏறியவுடன் நிம்மதிப் பெருமூச்சு விட்டோர் ஏராளம். ஆமியும் அடையாள அட்டையுமாய் இனி அவலப்பட வேண்டியதில்லை. அடுத்து நாம் கால் பதிப்பது சொர்க்கபுரியிற்றான் என்ற நினைப்பில் அந்த முதல் விமானப்பயணத்தை ஆனந்தமாய் அனுபவித்தனர் நம்மவர்.

முன்னாற் போனோரும், பயணமுகவர்களும் குடிகொண்ட மண்ணின் முதற்கட்டத் துயரங்களைப் புதிதாகப் புறப்படுவோருக்கு அறிவுரையாகவேனும் புரியவைக்க முயன்றதில்லை.

வானில் பறக்கையில் வானளாவக் கட்டிய கனவுக்கோட்டைகளின் ஒரு பகுதி பயண வழிப்பாடுகளில் சிதைந்தது. எனினும் வளமான ஒரு நாட்டில் கால் பதித்துவிட்டால் சிதைந்த பகுதிகளை மீள்கட்டுமானம் செய்துவிடலாம் என்ற புதிய கனவுகளையும் வளர்த்துக்கொண்டனர்.

ஒருவழியாகக் கிழக்கைரோப்பிய நாடுகளின் எல்லைகளாக இருந்த மேற்கைரோப்பிய நாடுகளான, ஜெர்மனி, இத்தாலி, கிரேக்கம் போன்ற நாடுகளில் நுழைந்தனர். இவ்வாறு நுழைந்தவர்கள் பெரும்பாலும் சிறிய கைப்பையை மட்டும் கொண்டவர்களாக அல்லது ஏதுமற்றவர்களாகவே காணப்பட்டனர். தரைவழியாகச் சென்றோர் பெரும்பாலும் ஜெர்மனி நாட்டுக்குள்ளேயே நுழைந்தனர். தொடக்க காலத்தில் சென்றோருக்கு அங்கு எந்த உறவுகளும் இருக்கவில்லை. ஏதோவொரு வழியாக அகதி முகாம்களின் முகவரியை அறிந்து அங்குதான் தஞ்சம் கோரினர். அவர்களுக்கான மாற்று உடைகளும் உணவும் உறைவிடங்களும் முகாம்களில் வழங்கப்பட்டன.

தொடக்க காலத்தில் பிரான்சில் குடியேறியோர் சிறு அறைகளில் வாடகைக்குத் தங்கியிருந்தனர். அவ்வாறானோரின் தொடர்புகளை வைத்திருந்தோர் ஜெர்மனி வழியாகப் பிரான்ஸ் நாட்டுக்கு அழைக்கப்பட்டனர். ஜெர்மனி பிரான்ஸ் எல்லைகளைக் கடப்பது அப்போது இலகுவான காரி யமல்ல. எல்லைக்காவலர் கண்ணில் மண்தூவி ஆட்கடத்தும் பணி அது. இதற்கெனப் 'பயிற்றப்பட்ட வல்லுனர்' கள் சிலர் இருந்தனர். இவர்களின் சாகசங்கள் தனி அத்தியாயமாக எழுதப்படவல்லவை. பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற தமிழர் பாரிஸ் நகரிலேயே பெரிதும் குடியேறினர். ஐரோப்பாவுக்குப் (இங்கிலாந்து தவிர) பெயர்ந்தோர் முதலில் தேர்ந்தெடுக்கும் நகரமாக பாரிஸ் திகழ்ந்தது. பலரும் இங்கிருந்தே ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றனர்.

பிரான்ஸ் நாட்டுக்குள் நுழைந்து பாரிஸ் நகரை நெருங்கும்போது ஈபிள் கோபுர உயரத்திற்குப் புத்துணர்ச்சி பெற்றுக் கனவுகள் எழுவது தவிர்க்க முடியாதது. வானுயர்ந்த கட்டடங்களும் வாகன அணிவகுப்புகளும் சொர்க்கபுரிக்குள் நுழைந்து விட்ட உணர்வை உறுதி செய்யும்.

பல சந்துகள் கடந்து அடுக்குமாடிக் கட்டிடமொன்றுக்குள் நுழைந்து பல மாடிகள் ஏறி தங்குமிடம் சென்று வலது கால் பதித்து நிமிர்ந்தால், ஈபிள் கோபுரக் கனவுகளை சாதாரண மின்கம்ப உயரத்திற்குத் தாழ்த்தி விடும் அவலங்கள் மீண்டும் அங்கே காத்திருக்கும்.

ஓர் அறையில் கால்வைக்க முடியாத அளவுக்குச் சில இருதட்டுக் கட்டில்கள். கட்டில்களுக்குக் கீழ் பொதிகள். சுவரெங்கும் தொங்கும் ஆடைகள், கண்ணாடி. மிஞ்சிய இடங்களில் பல்வகைப் படங்கள். கட்டில்களின் எண்ணிக்கைக்கு மேலாகத் தங்குவோரது எண்ணிக்கை. ஒரு சிறிய குளியறை, ஒழுங்கற்ற சிறு சமையலறை. போலந்திற் பாரவண்டியில் படுத்துறங்கியபோதும் கூட போதிய இடம் இருந்திருக்கும்.

சிலமாத அலைக்கழிவின் பின் நீட்டி நிமிர்ந்து உறங்கலாம் என்று வந்தோரின் சோதனைகள் உடனடியாகத் தீர்வதாக இருக்கவில்லை.

வசதிகள் மிகக்குறைந்த தங்குமிடங்களைப்பற்றி வ.ஐ.ச. ஜெயபாலன் தன் கவிதை வரிகளில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சூல் கொண்ட பன்றியின் கருவறை போன்ற
பிராங்போர்ட் நகரச் சந்தியில் ஓர் அறை.
போர்வையிற் சுருண்ட
யாழ்ப்பாணத்து நடைப்பிணம் சிலது
எகிப்திய மம்மியாய் அடுக்கிக் கிடக்கும்... (வ ஐ சு ஜெயபாலன் கவிதைகள் )

பிராங்போர்ட் நகர் சூல் கொண்ட பன்றியின் கருவறை போன்றது. ஏகப்பட்ட குட்டிகள் பன்றியின் கருவறைக்குள் நெருங்கிக் கிடக்கும். இந்த நகரில் ஓர் அறை. அங்கு யாழ்ப்பாணத்து நடைப்பிணங்கள். உணர்ச்சியற்ற உயிருள்ள வாழ்வின் அடையாளங்கள். அவை அங்கே படுத்திருக்கவில்லை, அடுக்கப்பட்டுள்ளன எகிப்திய பிரமிட்டுகளுக்குள் அடுக்கப்பட்டிருக்கும் 'மம்மி' களைப் போல.

தொடக்ககால வாழ்வியல் அவலத்தின் சில பரிமாணங்களை தன் கவிக்குறியீடுகளின் ஊடாகப் பதிவாக்கியிருக்கின்றார் வ.ஐ.ச.

வண்ண வண்ணமாய் எத்தனை கனவுகளோடு வந்த பயணம் இது. குண்டுகளுக்கும் பதுங்குழிகளுக்கும் இடையே சிக்குண்டு சீரழிந்த தாயக வாழ்வில் இருந்த மனவெழுச்சி இந்தக் கூடுகளில் இறந்து கிடக்கின்றது. இருட்டறை வாழ்வு பற்றி அருந்ததி இப்படி எழுதுகின்றார்.

இருளடைந்து போன
இந்தக் கூடுகளில்
அடைபடுவதற்காகவா
இறக்கை கட்டி வானத்தில்
பறந்து வந்தோம்.. (சமாதானத்தின் பகைவர்கள்)

இந்த நாடுகளில் குடியேறி ஓர்மத்தோடு போராடி நிலைபெற்ற இனங்களில் தமிழருக்கு ஒரு தனித்துவம் உண்டு. இந்த வாழ்வியற் போராட்டம் பல வடிவங்களில் தொடர்ந்து. வலிகளை வென்றும், வலிகளுக்குப் பழக்கப்பட்டும் தமக்கான தடங்களைத் தாமே சமைத்தனர்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## வரலாற்றை மறைக்கும் ஒருவகைக் கழுத்தறுப்பு!

எழுத்தாள நண்பர் ஒருவரின் முக நூலில். சகோதர எழுத்தாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அவமரியாதை பற்றி கொஞ்சம் எழுதப்பட்டிருந்தது.

கடந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளரின் இருபதாவது மாநாடு பற்றிய சமாசாரம் இது. க.த.எ இணைய ஸ்தாபகத் தலைவரான வீணைமைந்தன் மொன்றியலிலிருந்து (தமது செலவில்) வந்து இதில் கலந்து சிறப்பித்தார்.

முன்னாள் தலைவர்களில் ஒருவராக மட்டுமே இவர் கணிக்கப்பட்டரே தவிர இவரது சேவை பற்றி யாரும் வாய் திறக்கவில்லை. இரண்டு நிமிடத்துக்கு உரையாற்றக்கூட இவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையாம்.

இணைய ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரான அளவெட்டி சிறுசு இதனை அறிந்தபோது என்ன சொன்னார் தெரியுமா?

"உப்பிடி மரியாதை கிடைக்கும் எண்டு தெரிஞ்சுதான், என்னை வருமாறு பல தடவை அழைத்தும் விழாவுக்கு நான் செல்லவில்லை!".

## சந்தனம் மிஞ்சினால் தடவலாம் ...............

இங்கிலாந்தில் நடைபெற்ற பூப்புனித நீராட்டு வைபவமொன்றுக்கு, கூப்பிடு தூரத்திலுள்ள மண்டபத்துக்கு மகளை அழைத்துச் செல்ல வாடகை உலங்கு வானூர்தியொன்றை ஆயிரக்கணக்கான பவுண்ஸ் செலவழித்து பெற்றோர் ஒழுங்கு செய்தனர்.

கனடாவிலுள்ள ஒரு தமிழ்க் குடும்பத்தினர் தங்களின் ஐந்து வயது மகனின் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடும் முகமாக, ஐந்து தங்கப் பவுணில் கத்தி செய்வித்து, அதனால் கேக் வெட்டி மகிழ்ந்தார்கள்.

ஐரோப்பிய நாடொன்றில் மற்றொரு தமிழ்க் குடும்பத்தினர் தங்கள் பிள்ளையின் பிறந்த நாளுக்கு வந்த ஒவ்வொருவருக்கும் வேட்டி, ஷேர்ட், சேலை ஆகியவற்றை வழங்கி வந்தோரை மகிழ்வாக்கினர்.

இவர்கள் ஒவ்வொருவரும் இதற்குச் சொன்ன காரணம், "எங்கள் பணத்தை எங்கள் பிள்ளைகளுக்குச் செலவு செய்வதில் என்ன தவறு" என்பது.

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வெளிவரும் தமிழ்ப்பத்திரிகையொன்று கடந்த மாதத்தில் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக இதனைப் பிரசுரித்ததுடன், "இங்கு ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியின்றி தவிப்பவர்களை மறந்து விடாதீர்கள்" என்றவாறும் எழுதியிருந்தது!

## வாய் திறக்காதிருந்தால் அதுவே போதும் ஐயா....

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றவர்கள் தவிர, மேலும் நால்வர் ஆயுள் தண்டனை பெற்றனர். இவர்களும் தற்போது அரசின் கருணையை எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

இவர்களுக்கு விடுதலை வழங்க வேண்டுமென்று முன்னாள் முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுபற்றி, ஆயுள் தண்டனை பெற்றவர்களில் ஒருவரான ரவிச்சந்திரன் இப்படிக் கூறுகிறார்:

"அதிகாரத்திலிருக்கும்போது ஆதரவாக முடிவெடுக்காத கருணாநிதி இப்போது கோரிக்கை வைப்பது, எங்கள் மீதான அக்கறையாலல்ல. தான் வாய் திறந்தால் ஜெயலலிதா எதிராகவே செயற்படுவார் என்ற கெட்ட எண்ணத்தினால்தான்! அவர் வாய் திறக்காமலிருந்தாலே போதும், அனைவருக்கும் நல்லது நடக்க வாய்ப்புள்ளது" என்று கூறியுள்ளார் ரவிச்சந்திரன்.

கருணாநிதியருக்கு இப்படியுமொரு கஷ்ட காலம்!

## பணிப்பெண்கள் ஓட்டிய ஏயர் இந்திய விமானம்

பாங்கொக்கிலிருந்து புதுடில்லிக்குப் பறந்து கொண்டிருந்த ஏ-320 விமானத்தில், 166 பயணிகள் இருந்தனர். இது மூன்று மணி நேரப் பயணம்.

விமானம் பறக்க ஆரம்பித்த சில நிமிடங்களில் பிரதான விமான ஓட்டி 'பிசினஸ் கிளாஸில்' காலியாகவிருந்த ஆசனத்தில் சென்று தூங்க ஆரம்பித்தார்.

இரண்டு விமானப் பணிப்பெண்களுக்கு விமானம் ஓட்டுவதைக் கற்றுக் கொடுத்த துணை விமானியும் காலி ஆசனம் ஒன்றில் படுத்துத் தூங்கிவிட்டார்.

கனிக கலா, ஜே பாற் என்னும் இரண்டு பணிப்பெண்களும் ஒருவாறு விமானத்தைப் பவுத்திரமாக புதுடில்லி கொண்டு சென்று இறக்கி விட்டனர்.

அடுத்த நாள் பத்திரிகையொன்றில் இந்த விடயத்தை வாசித்த 166 பயணிகளில் ஒருவர், மாரடைப்பால் மரணமானார்.

## "இவங்கள் விசரன்கள்; மேடை கிடைச்சா காணும்!"

"இவங்கள் விசரன்கள்; எவ்வளவு காலத்துக்கு இப்பிடி அரைக்கப் போகினம்; மேடை கிடைச்சால் காணும்...."

கனடா எழுத்தாளர் அகில் எழுதிய கதைகள் ஒன்றில் வரும் வாக்கியம் இது. அண்மையில் வெளியான அவரது 'கூடுகள் சிதைந்தபோது' நூலில் இக்கதை இடம்பெற்றுள்ளது.

இந்த வாசகம் கனடியப் பேச்சாளர்கள் பலருக்கும் பொருந்துமாம். இது பற்றி மற்றொரு படைப்பாளி கருத்துக் கூறும்போது, புத்தக வெளியீட்டு விழாக்களில் மேடையேற்றப்படும் சிலர், "இப்படியொரு சிறந்த நூல் இதுவரை வெளியாகவில்லை என்று ஒவ்வொரு விழாவிலும் கீறல் விழுந்த 'றெக்கோர்ட்' போல விளாசுவது பற்றி என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டார்.

"இது பரவாயில்லை; என்னைப் பேச அழைத்தால் உங்கள் விழாவுக்கு நல்ல 'பப்ளிசிற்றி' தருவேன் என்று சொல்லி மேடை கேட்கும் பேப்பர்காரர் ஒருவர் பற்றி அறியவில்லையா?" என்று கேட்டார் இன்னொரு புத்தக வெளியீட்டாளர்.

## பாட்டி, அம்மா பாணியில் பேரனும் இறங்குகிறார்

தமது பாட்டி இந்திரா காந்தி, அம்மா சோனியா பாணியில், காங்கிரஸ் துணைத் தலைவரான ராகுல் காந்தி கர்நாடக தொகுதி ஒன்றிலும் போட்டியிடவுள்ளார்.

தங்களின் அமேதி தொகுதியில் போட்டியிட்டாலும், தற்செயலாக அங்கு மண் கவ்வி விட்டாலும் என்ற அச்சத்தில் கர்நாடகாவிலும் ஒரு தொகுதியில் போட்டியிடுவது நேரு குடும்பத்தின் வழக்கமாம்.

'கர்'ம 'நாடக'ம் போலும்!

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்திற்கு மூன்று தடவைகளாவது தலையிடியோடு அவனைத் தாயார் அழைத்து வருவாள்.
அவனது தலையிடிக்கான காரணம் இப்பொழுது அவனுக்கும் தெரியும். அவனது தாயாருக்கும் நன்றாகத் தெரியும்.

வகுப்பில் முதல் மாணவன். ஆனாலும் தவணைப் பரீட்சை வரும்போது தனது முதலாம் இடம் தப்பிவிடக் கூடாது என்பதால் ஏற்படும் மனஅழுத்தம் தலையிடியாக அவனில் வெளிப்படுகிறது.

மற்றொரு குடும்பத் தலைவியின் மண்டைவலி கடுமையானது. பாராத மருத்துவர்கள் இல்லை. செய்யாத பரிசோதனைகள் மிச்சமில்லை. மூளைக்குள் கட்டி, சைனஸ் சளி, சொத்தைப் பல் போன்ற நோய்கள் காரணமாக இருக்கலாம் என மருத்துவம் செய்துவிட்டாள்.

ஆனால் அடிப்படைக் காரணம் மனஅழுத்தம்தான். கணவன் பல வருடங்களாக வெளி நாட்டில். அவன் இங்கு வரவும் முடியாது, இவர்கள் அங்கு போகவும் முடியாது. வளர்ந்த பெண் பிள்ளைகளுடனும், விடலைப் பயலுடனும் அல்லாடும் மனஅழுத்தம் அவளுக்கு.

மன அழுத்தம்
தலைவலி மட்டுமல்ல, நெஞ்சு வலி, வயிற்று வலி, சோர்வாக இருக்கு, பசியின்மை, அடங்காத பசி, பாலியல் குறைபாடு, தூக்கக் குழப்பம், மாதவிடாய்ப் பெருக்கு போன்ற பிரச்சனைகளுடன் வரும் பலருக்கு மனஅழுத்தமே அடிப்படைக் காரணமாக இருக்கிறது.

Stress என ஆங்கிலத்தில் வழங்கும் மன அழுத்தத்தை உளநெருக்கீடு என்று இப்பொழுது சொல்கிறார்கள்.
சாக்கடையை என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் அதன் தாக்கம் எப்பொழுதும் நாற்றம்தான். அதேபோல மனஅழுத்தத்தை என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் பாதிப்புற்றவருக்கு பொறுக்க முடியாததுதான்.

பாதிப்புகள்
எரிச்சல், கோபம், சினம், படபடப்பு, ஒழுங்காகத் தனது கடமைகளைச் செய்ய முடியாத நிலை போன்றவை மனஅழுத்தம் காரணமாக ஏற்படலாம். வேண்டாத வார்த்தைகளை பொருத்தமற்ற வேளைகளில் உதிர்த்து விடுகிறார்கள். இதனால் குடும்ப மற்றும் நட்பு உறவுகளில் விரிசல் அடைதல் போன்ற சிக்கல்களை நாளாந்தம் எதிர் கொள்ள நேர்கிறது.



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# மன அழுத்தம் என்னும் உளநெருக்கீடு

ஆனால் இவற்றுக்கு மேலாக பல உடல்நோய்களைக் கொண்டு வருகின்றன. மேலும் பலநோய்களைத் தீவிரப்படுத்துகின்றன. உயர் இரத்த அழுத்தம், சுவாசப் பிரச்சனைகள், சமிபாட்டுப் பிரச்சனைகள், இருதயத் துடிப்பில் மாற்றங்கள், தசைப் பிடிப்புகள் போன்றவை சில உதாரணங்களாகும்.

விடுபட உதவும் வழிமுறைகள்
மன அழுதத்திலிருந்து விடுபட வேண்டுமாயின் அதற்கான காரணம் நீங்க வேண்டும். ஆனால் அது எப்பொழுதும் சாத்தியமானதல்ல. ஆனால் அதன் தொல்லையை நீக்க வேண்டுமாயின் வேறு விடயங்களில் எமது மனதைச் செலுத்த வேண்டும். வாசிப்பு, சினிமா, விளையாட்டு, சமையல், ஆன்மீகம் என தனக்குப் பிரியமான விடயங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
நெருக்கமானவர்களுடன் தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது அவசியம், மது, போதை, மற்றும் புகைத்தலில் மாட்டுப்படக் கூடாது. கோப்பி தேநீர் போன்றவையும் அதிகம் கூடாது.

மருத்துவ ரீதியாகவும் பல வழிகளைச் சொல்லித் தருகிறார்கள். உடல் உழைப்பு, உடற் பயிற்சிகள், தியானம், யோகாசனம், சாந்த வழி முறைகள் (Relaxation techniques), Tai chi எனும் சீன உடற் பயிற்சி முறை போன்ற பல உள்ளன. இவற்றைச் சொல்லித் தரும் நபர்களும், நிலையங்கள் பலவும் இப்பொழுது இருக்கின்றன.

மேற் கூறியவற்றை பயில முடியாதவர்கள், எமது பாரம்பரியத்தில் வந்த சில முறைகளைத் தாங்களாகவே வீட்டிலிருந்து முயற்சிக்க முடியும்.

சுவாசப் பயிற்சி
மன அழுத்தங்களிலிருந்து விடுபட சுவாசப் பயிற்சி கைகொடுக்கும்.
அங்குமிங்கும் சஞ்சரிச்சு உளைச்சலடையும் மனதை ஒருமுகப்படுத்த யோகாசனப் பயிற்சியின் ஒரு அங்கமாகச் சுவாசப் பயிற்சி செய்யப்படுகிறது. அது பத்மாசனத்திலிருந்து செய்யப்படுவது.
காலத்திற்கு ஏற்ற வகையில் இதனை விஞ்ஞான பூர்வமாகவும் இலகுவான முறையில் செய்யலாம்.
• இரு பாதங்களும் தரையில் இருக்குமாறு ஒரு நாற்காலியில் முதுகை நிமிர்த்தியபடி உட்காருங்கள்.
• உள்ளங் கைகள் இரண்டையும் வயிற்றில் படுமாறு உங்கள் தொடைகளில் தளர்ச்சியாக வையுங்கள்.
• ஒன்று இரண்டு மூன்று நாலு என மனதிற்குள் எண்ணிக்கொண்டு மெதுவாக மூக்கினால் மூச்சை உள்ளெடுங்கள். அவ்வாறு செய்யும்போது உங்கள் வயிறு உயர்வதை அவதானத்தில் எடுங்கள்.
• ஒரு செகண்ட் நேரத்திற்கு மூச்சைப் பிடியுங்கள்.
• முற் கூறியவாறு எண்ணிக்கொண்டு வாயினால் மூச்சை வெளியே விடுங்கள். மூச்சை விடும்போது உயர்ந்த வயிறு தளர்வதை அவதானியுங்கள்.
• உங்கள் அவதானம் முழுவதும் உங்கள் சுவாசத்தில் மட்டுமே இருக்க வேண்டும். மனம் அடங்காமல் அலைந்தால் அதன் பாட்டிற்கு விட்டுக் கொடுத்து மீண்டும் சுவாசத்தில் ஒன்ற வைக்க முயலுங்கள். தொடர்ந்து பயின்று வர ஒழுங்கான முறையில் செய்ய முடியும்.
• இப் பயிற்ச்சியை 10 தடவைகள் மீளச் செய்யுங்கள்.

சாவசனம்
யோகாசனத்தில் சாவசனம் என்றொரு பயிற்சி உள்ளது. பெயரைக் கேட்டுப் பயப்படாதீர்கள். இதுவும் நல்லதொரு பயிற்சியாகும்.
• காற்றோட்டமுள்ள வசதியான ஆளரவமற்ற அமைதியான இடத்தில் படுத்திருங்கள். தரை கட்டில் பாய் எதுவானாலும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தேர்ந்தெடுங்கள்.
• தளர்ச்சியான உடைகளைத் தேர்ந்தெடுங்கள். (30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்



# குறளில் ஒரு நாடகம் - கோல் காணாக் கண்கள்!

இடம் - சங்க காலத்துத் தமிழ் வீடு
நேரம் - காலை வேளை
பாத்திரங்கள் - தலைவி தோழி

ஒரு தலைவி தன் காதலனை எப்போதும் பகலில் குற்றம் சொல்லிப் பேசுவாள். இரவு வேளைகளில் அந்தக் காதலன் அவள் வீட்டுக்கு வருவான். தலைவி கோவிக்க மாட்டாள். சிரித்துப் பேசுவாள்! சிறந்த உணவு அளிப்பாள்! தழுவிக் கிடப்பாள்! தமிழ்பாட்டுப் பாடிடுவாள்! இது எல்லாம் என்னவென்று கேட்கின்றாள் அவள் தோழி!

தோழி:
மாலைப் பொழுது வரும்! மடிகிடந்தார் நினைவு வரும்! காலைத் தடவியவர் கை கிடந்த உணர்வு வரும்! கொதிப்பாள் ஒருத்தி! கொக்கரிப்பாள் காமத்தில்! குதிப்பாள் வானத்தில்! குறை சொல்வாள் காதலனை! முகம் கொடுத்துப் பேசேன்! முன்னாலே போய் நிற்கேன்! அகம் கொடுத்த காதலால் அழுதது இனிப் போதும் என்பாள்! மாலை முடிந்து இரவு வரும் அப்போது! பூனைபோல் ஒருவன் புகுந்திடுவான் அவள் வீட்டில்! எண்ணெய்த் திரி விளக்கு எப்படியோ அணைந்து விடும்! வளையல் கலகலக்கும்! வாளி நீர் ஒலி கேட்கும்! சமையல் புகை வந்து சங்கதியைச் சொல்லிவிடும்! பொழுது விடியும்! பூனையதும் ஓடிவிடும்! கட்டிப் புரண்டதிலே கை நகத்து அடையாளம் குட்டி நிலாப் போலக் குவிந்துவிடும்! அதையெல்லாம்.........

தலைவி:
போதும்! தாயே போதும்! காதல் வலை வீழாக் காரணத்தால் கண்மணியே மோதல் செய்ய வந்துவிட்டாய் காலையிலே! ஆற்றைக் கடல் அணைக்கும்! அருமதியை வான் அணைக்கும்! நாற்றை வயல் அணைக்கும்! நன்மலரை வண்டணைக்கும்! ஊற்றை நதி அணைக்கும்! ஓவியத்தைச் சுவர் அணைக்கும்! கொற்றொடியார் மார்பகத்தைக் கொழுநர் அல்லால் யார் அணைப்பார்? தெரியுமா தோழி உனக்கு? கிளைமாறி அமர்கின்ற கிள்ளையல்ல என்னகத்தான்! நானும் மரம் மாறிப் படருகின்ற கொடியுமல்ல. கண்டோம்! காதலித்தோம்! கையளைந்தோம்! அதிலென்ன?

தோழி:
அணைத்திடுங்கள் நன்றாய்! ஆரும் தடுக்கவில்லை! துணைத்தலைவன் இல்லாத போதெல்லாம் நீ தொடுத்த கணைத்தடங்கள் எத்தனையோ. எண்ணிப்பார்! பாவி என்பாய்! பாவை மனம் அறியாப் பாதகனே எனச்சொல்வாய்! பகற்பொழுதில் வெறுத்து பகல் அழிந்த இராப்போதில் அகம் தழுவிக் கூடும் அதுவென்ன காதலோ? காலையிலே நெருப்பாகத் தெரியும் காதலர் மாலையிலே இனிப்பாவது எப்படி? இல்லாத போதினிலே எத்தனையோ குற்றங்கள்! இருந்துவிட்டால் கைநகமும் காயங்களும் வந்துவிடும் உன்னிடத்தில்! வெட்கமாக இல்லையிது? கூடாத மனிதனென்று குறை கூறித் திரிந்தவள் நீ! அவனோடு ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறாய் இரவுகளில்!

தலைவி:
இதோ பார்! என்ன இது? மங்கையர்கள் கண்ணுக்கு மை தீட்டும் கரிக்கோல்! கரைத்த மையும் அதைக் கண்ணெழுதும் கோலுமாய் முன்னாலே காண்கின்றாய் அல்லவா? எடுத்துக்கொள்! எடுத்தாயா? கண்ணருகே கொண்டுபோ! உன் கருங்கண்ணில் மை எழுது! எழுதிப் பார்! கையெடுத்த கோலதுதான் கண்ணருகே வந்ததும் இமை மூடும் பெண்ணணங்கே! காதலும் அப்படித்தான்! காமமும் அப்படித்தான்! மையெழுதும் கோலருகே வந்ததும் இமைமூடும் விழிபோல காதலன் அருகே வரும்போது அவன் குறை தெரிவதில்லை எனக்கும்! அகம் மூடிவிடும் எனக்கு! உடல் கூடிவிடும் அவனுடன்! எழுதி முடியும்வரை திறவாத கண்போல! உண்மை இதுதான் பெண்ணே!

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து!

எழுதுங்கால் - கண்ணுக்கு மை எழுதும் போது: கோல்காணாக் கண்ணேபோல் - முடிக்கொள்வதால் மையைத் தொட்டு எழுதுகின்ற கரிக்கோலைக் காணமுடியாத கண்ணைப் போல: கொண்கன் பழி - காதலனுடைய தவறுகள் மனம் நிறைய ஞாபகம் இருந்தும்: கண்டவிடத்து கானேன் - என்முன்னே அவனைக் காணும் போது அவற்றைக் காணமுடியாதவள் ஆகின்றேன்!

கண்ணுக்கு கறுப்பு மை எழுதும் பென்சிலை கண்ணானது தனக்குக் கிட்ட வரும் வரை தான் பார்க்கும்.

கீறத் தொடங்கியதும் முடிக் கொள்ளும்!

இந்த உதாரணத்தை சங்கம் மருவிய காலத்திலேயே கவனித்து காதல் உறவுக்கு உதாரணம் காட்டியிருக்கிறார் வள்ளுவர்.

அவரின் காமத்துப் பால் காதல் உலகம் இன்னும் புரிந்து கொள்ளாத புதையல் ஆகும்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன்

கடந்த மாதம் இலங்கை கிரிக்கட் வீரர் குமார் சங்ககாரா தமிழகத்தில் விளையாடுவதை எதிர்த்துத் தமிழகத்திலுள்ள ஈழ ஆதரவாளர்கள் ஒரு போராட்டம் நடத்தினார்கள். முகப்புத்தகம் அதிலும் சேர்ந்து கொண்டது. அந்த போராட்டத்தை விமர்சித்து தமிழக இரண்டெழுத்து அரசியல் எழுத்தாளர் ஒருவர் பின்வருமாறு தன் முகப்புத்தகத்தில் எழுதியிருந்தார். அதில் *'இலங்கை கிரிக்கெட் வீரர் குமார் சங்ககாராவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் தமிழர்கள்' என்று சொல்லிக் கொள்வோரின் ஆர்ப்பாட்டம் அறிந்து வருத்தப்படுகிறேன். 1983 இனக்கலவரத்தின்போது சங்ககாரா ஆறு வயது சிறுவன். அவரது தந்தையும் வழக்கறிஞருமான சிக்சானந்த சங்ககாரா தன் வீட்டில் 35 தமிழர்களுக்கு (குறிப்பாக பல சிறுவர்களுக்கு) அடைக்கலம் கொடுத்து கலவர காலம் முழுவதும் அவர்களைக் காப்பாற்றியவர். ஈழத் தமிழர்களின் இன்றைய அசல் எதிரிகள், இங்கே சிங்களவர்களுக்கு எதிராக அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள் செய்வோர்தான் என்ற என் கருத்து வலுப்பட்டுக் கொண்டே இருக்கிறது."* என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஈழ ஆதரவாளர்கள் வெகுண்டனர். முகப்புத்தகத்தில் விவாதம் பற்றிக் கொண்டது. அந்த இரண்டெழுத்து ஓபோடும் எழுத்தாளரோடு பலரும் விவாதத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். ஒரிருவர் எழுத்தாளரை ஆதரித்தும் கருத்திட்டனர். எதிர்த்தவர்களுள் ஒருவர் அந்த எழுத்தாளரை பின்வருமாறு சாடினார்: *'ஈழவிடுதலை எதிர்ப்புக்கான உங்கள் நுட்பமான அரசியல் புரிகிறது. இங்கு எதிர்ப்பு என்பது சங்கக்காராவுக்கு மட்டுமல்ல. இலங்கையின் அதிகாரப்பூர்வ அணிக்காக விளையாடும் அனைவருக்கும்தான். தமிழன் என்ற சொல்லப்படக் கூடிய முரளிதரன் வந்தாலும் எதிர்ப்போம். இது விடுதலையை நோக்கிய குரல். இங்கு ஆள்பார்த்தெல்லாம் குரலை மாற்றிக்கொண்டிருக்க முடியாது. நாங்கள் வேண்டுவது பொருளாதாரத் தடை. அது வராதவரை இந்த எதிர்ப்பு தொடரும்."* என்று பதிந்திருந்தார். எழுத்தாளரும் அசரவில்லை. பதில்களை வைத்தார். மாறி மாறி விவாதம் தொடர்ந்தது. விவாதிப்பின் ஒரு கட்டத்தில் *'தமிழகத்தில் நடத்தப்படும் போராட்டங்களின் பயனாக உயிர்ச் சேதங்கள்தான் விளைவாக வரும்"* என பூச்சாண்டி காட்டிப் பயமுறுத்துவதுபோல வந்தன அந்த எழுத்தாளரின் பதிவுகள்.

அட என்ன இது? உண்மையில் இவர் 'போராட்டம் வேண்டாம்" என்று சொல்கிறாரா அல்லது 'உணர்ச்சி வசப்பட்டு வரும் தீக்குளிப்பு போன்ற உயிர் இழப்புகளை தடுக்குமாறு சொல்கிறாரா" என்பது புரியாமல் நானும் என் பங்குக்கு ஒரு பதிவை அவரது பக்கத்தில் கொமன்ட்ஸாக இட்டேன். அதில் *'உணர்ச்சி அரசியல் உயிரைக் கொல்லும் என்று நீங்கள் பயப்படுவது ஒருவகையில் நியாயமே... ஆனால் உங்களைப்போலப் பயந்திருந்தால் காந்தி சுதந்திரத்திற்காகப் போராடியிருப்பாரா? சிலவகை அடையாள எதிர்ப்புக்களை தீவிரவாதம்போல காட்டி நீங்கள் பயமுறுத்துவது சரியா? உயிரிழப்பு இல்லாத வகையில் இந்தப் போராட்டங்களை எப்படித் தொடர்வது என்பது குறித்து ஆலோசனை கொடுங்களேன் ஐயா..."* என்று கேட்டேன். அதற்கு அவர் *'அதை ஈழத்தில் வாழும் தமிழர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். சம்பந்தப்பட்டிருப்பது அவர்களுடைய உயிர். என்னுடையதோ உங்களுடையதோ அல்ல"* என்று பதிலிட்டார்..

நானும் விடுவதாயில்லை பதிலுக்கு *'தமிழகத்தின் குரலை ஈழத்தமிழர்கள் நம்பிக்கையுடன்தான் பார்க்கிறார்கள்..! இன்று ஈழத்தில் எஞ்சியிருக்கும் தமிழ் மக்கள் விக்கித்துப் போய் கையறு நிலையில் இருக்கிறார்கள்... உண்மையில் நடந்த போரின் வலியால்தான் அவர்கள் மௌனமாக இருக்கிறார்கள்... ஒருவேளை தனி ஈழம் கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை என்றே வைத்துக் கொண்டால்கூட, போரின்பின் தரப்படவேண்டிய அரசியல் தீர்வு அங்கு தரப்படவில்லை என்பதை மறுக்க முடியுமா? உண்மையில் தமிழர்கள் தனி நாடு கேட்பதற்கான காரணங்கள் போரின் பின்புதான் ஈழத்தில் சரியாக பொருந்தி வருகின்றன. ஆனால் தீர்வு கேட்டுப் போராட முடியாதபடி அங்கு ஈழத்தமிழரின் முதுகெலும்பு உடைக்கப்பட்டிருக்கிறது."* என்று பதிலுக்குப் பதில் போட்டேன். நான் மட்டுமல்ல இன்னும் பலரும் எழுத்தாளருடன் முரண்பட ஆரம்பித்தனர். இன்னும் உக்கிரமாக விவாதங்கள் தொடர்ந்தன. ஏனோ நான் நிறுத்திக் கொண்டேன்.

இரண்டு தினங்களுக்கு பின்பு முகப்புத்தகத்தில் ***'தாக்குதல்: கண்டிப்போம்!"*** என்ற தலைப்பில் சமீபத்தில் இலங்கை சென்று தடையுத்தரவு பெற்றவரும், மார்க்ஸிய விமர்சகருமான எழுத்தாளர் ஒருவர் கடும் கண்டனத் தொனியில் ஒரு அறிக்கை விட்டிருந்தார். அதில் ஒ போடும் எழுத்தாளர் பெயரைக் குறிப்பிட்டு *'தன் முக நூல் பதிவொன்றுக்காக ஒ போடும் எழுத்தாளர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். வழக்கமான அவதூறுகள், பொய்கள், இழிவுச் சொற்கள் ஆகியவற்றைத் தாண்டி அவர் மீது அசிட் வீசுவோம் என்பதுவரை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எழுத்தாளரும் மனம் வருந்தியுள்ளார் என அறிகிறேன். எழுத்தாளரின் பதிவுடன் நான் நூறு சதம் உடன்படுகிறேன்.. எழுத்தாளரின் கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றோ, மாற்றுக் கருத்தை யாரும் பதிவுசெய்யக் கூடாது என்றோ நான் கூற வரவில்லை. ஆனால் அதற்கெல்லாம் ஒரு எல்லை உண்டு. இன்று அவர்மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் அப்பட்டமான பாசிசம். தமிழின் பெயரால், ஈழ ஆதரவு என்கிற பெயரால் இந்த சிவசேனைத் தனமான பாசிச நடவடிக்கைகளை ஜனநாயக சக்திகள் கண்டிக்க வேண்டும்."* என்று எழுதப்பட்டிருந்தது.

அடுத்த அடுத்த நாட்களில் எழுத்தாளருக்கு ஆதரவு தெரிவித்த விமர்சகரின் கருத்தோடு கனடாத்தமிழர் சிலரும்கூட உடன்பட்டு தம் கருத்தைப் பதிவு செய்தனர். விமர்சகரின் பதிவை தம் பக்கங்களில் பகிர்ந்தும் கொண்டனர்.

'ம்... பாசிச நடவடிக்கைகளை ஜனநாயக சக்திகள் கண்டிக்க வேண்டும். சரிதான்." என்று மனதில் சொல்லி விட்டு நான் கொடுத்த கமென்டுகளையும், அதன்பின் மற்றவர்கள் போட்ட கமென்டுகளையும் ஒரு முறை திருப்பியும் பார்க்கலாமே என்று ஓ போடும் அந்த எழுத்தாளரின் முகப்புத்தகத்துள் நுழைந்தேன். எல்லாக் கொமன்டுகளையும் படித்துப் பார்த்துக் கொண்டு வந்தபோதுதான் ஒன்றை அவதானித்தேன். நான் போட்ட கமென்டு-களைக் காணவில்லை. அவற்றை அந்த எழுத்தாளர் தன் பக்கத்தில் இருந்து நீக்கியிருந்தார். இன்னும் எத்தனை பேருடைய கமென்டுகளையும் அப்படி நீக்கியிருந்தாரோ தெரியவில்லை.

'ஓ... இப்ப பாருங்கோ... ஒருத்தர் முகப்புத்தகத்தில் போடும் கொமென்டுகள் நீக்கப்படுவது மட்டும் பாசிசம் இல்லையோ?" என்று உடனே அந்த மார்க்ஸிஸ விமர்சகரிடம் கேட்க வேண்டும்போல இருந்தது. பாசிச நடவடிக்கைகளை ஜனநாயக சக்திகள் கண்டிக்க வேண்டுமன்றோ...!!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# இனிதம் - மனிதம் - புனிதம்

இம்மூன்று பதங்களும், ஓர் இனத்தின் பண்புடைமையை விளக்குகின்றன. இனிமையின் இங்கிதம் இனிதம் என்ற சொல்லிலும், மனிதம் மக்கட் பண்பின் ஒட்டுமொத்த வளத்தையும், புனிதம் நமது சமய வாழ்வியலின் பெருமையையும் உணர்த்துகின்றன. இப்பதங்கள் தமிழின் தாமரை மலர்கள். இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றார் அவ்வையார். இன்னா நாற்பது இனியது நாற்பது நல்ல அறிவுப் பனுவல்கள். மனிதப் பிறவி உயர்ந்தது - அரிது அரிது மானிடர் ஆதல் அரிது. புனிதம் சமய சம்பந்தமானது. வாழ்க்கை சம்பந்தமானது. இப்படியான ஒப்புயர்வற்ற கருதுகோள் இப்பதங்களில் நிறைந்து காணப்படுகிறது. சமயத்தோடும், உயர்வான கடவுட் சிந்தனைகளோடும் தொடர்புடையது புனிதம். ஆலயம், விழா, தத்துவம் போல்வன தூய்மையைப் பற்றிச் சொல்வன. ஒட்டுமொத்தமாக நிறைவான மனித வாழ்வின் வாசனை புனிதத்திற் பரிமளிக்கிறது. தத்துவப் பண்ணைதான் புனிதம். புனிதம் எனும்போது அகம்புறச் சுத்தங்கள் பற்றிய எண்ணங்கள் வெளிப்படுகின்றன. சாதாரணமான வாழ்க்கையிலே இம்மூன்றும் இன்றியமையாதன. வள்ளுவனார் தன் பாக்களிலே நிறையக் கருத்துகளைப் பற்றி எழுதினார் நமக்காகவே. மனிதன் தன்னை வளர்த்துப் பூரண மனிதனாக்க இவை போன்ற நல்ல எண்ணக் கருக்கள் மனிதனுக்குத் தேவையன்றோ. வெறும் ஏட்டுப் படிப்பால் எள்ளளவு பயனுமில்லை. தானும் வளர்ந்து, தன் சுற்றமும் வளர்ந்து பூரண மனிதர்களாக இக்கோட்பாடுகள் யாவர்க்குமே தேவை.

அப்பர் பெருமான் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தேயெனப் பாடியுள்ளார். எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் அரிதரிது காண். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எது வருமோ அறிகிலேன் என எழுதியவர் தாயுமான சுவாமிகள். மனிதர் பிறந்து விட்டாற் போதாது. நல்ல கொள்கை கோட்பாடுகளைக் கட்டிப் பாதுகாக்கவும் வேண்டும். அப்போதான் பூரண மனிதனாகிறான். எனவே மனிதன் மனிதம் பூத்தவனாய் மிளிரவும் வேண்டும். ஆறறிவு உடையவன் மனிதன். ஆறறிவிலே ஒன்று குறைந்தால் - மனிதரல்ல. அவர்கள் மா (விலங்கு) எனத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். மாவும் மாக்களும் ஐயறிவினவே. மனிதராய் உருவெடுத்தாலும் - மனிதநிலை விலகி வாழ்வோர் விலங்குகள். மனிதரிலே நீர் வாழும் சாதியுண்டு. மிருகம் உண்டு. பறவையுமுண்டு. பகுத்தறிவுடையவன் மனிதன். எல்லாவகையான பிறவிகளையும் கடந்து, மனிதராய்ப் பிறத்தலும் மேலானதாம். மனிதத்தில் இருந்து விலகிப் போனவர்களே விலங்குகளாம். நாம் இனியவர்களாய் வாழ்வோம். இனிமையானவற்றைச் செய்வோம். இப்பூமி மேலோங்க எம்மாலியன்ற சேவை செய்வோம். பகுத்தறிவுப் பண்ணையிலே உதித்த எம் சேவைகளும் அவ்வண்ணமே ஆகட்டும். எம் சமுதாயம் பற்றியும் சிந்திப்போம். இனிமையானவற்றைச் செய்வோம். எம் கொள்கை, கோட்பாடு பற்றியும் ஆழமாய்ச் சிந்திப்போம். எல்லாப் படியாலும் நம்மை உயர்த்தி உலகில் உன்னத நிலையை எய்துவோம். நீயார்? ஏன் பிறந்தாய்? எதைச் செய்துவிட்டாய்? மற்றவர்களுக்கு நீயாற்றிய பங்களிப்பு என்ன? இந்த அடிப்படையிலே மனிதம் பேணுவோம். இன்னல் தவிர்த்து இனியவை செய்வோம். கெடுதிகளை விடுவோம். பிறர் போற்ற வாழ்ந்து காட்டுவோம்.

இனிமை, புனிதம், மனிதம் என்பவற்றின் கருதுகோளென்ன? உன்னாற் பிறருக்கு என்ன செய்ய முடிந்தது, முடியும்? நாட்களை எம் வாணாளை வீணாளாக்கக் கூடாது அன்றோ? என் பெற்றோர் சொன்னவற்றை வாழ்விலே மறவாமல் ஒவ்வொன்றாய் நிறைவேற்றுவோம். ஆசான்கள் கூறியவை, அயலவர்கள் சொன்னவை, சமூகத்தவர் முன்மொழிந்தவை இனசனம் சுற்றம் சூழலார் சொன்னவையெல்லாம் நம்மை மேலோங்கப் பயன்பட்டனவா? நின் கூட்டமைப்புகள் உனக்குப் பயன்பட்டனவா? மேலான சமுதாயத்தை இன்னும் மேலோங்க நீயாற்றிய பணிகளெவை இப்பூமிக்கு (நீ) வந்ததன் நோக்கம் என்ன? நிலையற்ற வாழ்வு பற்றிச் சிந்தித்தாயா? தாய்நாடு, தாய்மொழி, நீ பிறந்த சூழல் பற்றிச் சிந்தித்தாயா? நோயாளர், பின்தங்கியோர், நோயாளர், ஏழை, பேதை பற்றி எண்ணினாயா? நாளைய தினம் நீயென்ன செய்யப் போகிறாய்?

வள்ளுவப் பெருந்தகை மானிடஇயலை ஆழ அகல நீள ஆய்ந்து வடித்த இலக்கியம் திருக்குறள். பன்மொழிகளிலே மொழிபெயர்க்கவும் பட்டுள்ளது. தமிழ்ச் சமூகம் வாழக் கற்று கொள்ள நல்ல கையேடு. ஒரு குலத்துக்கு ஒரு நீதி அங்கே இல்லை. அன்பு, பண்பு" ஆளுமையென 133 திவ்விய வாழ்க்கை அங்கே பேசப்பட்டிருக்கிறது. எம் கருதுகோளின் எடுகோள்களான இனிதம், மனிதம், புனிதம் பற்றிய சித்தாந்தங்களை அங்கே காணலாம். இனி தம் மனிதம் புனிதம் பண்புகளாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

இனிமை ஒரு பண்பு அல்லது குணம். வன்மை கடினம். நமக்கு நன்மையளிக்காது. மனிதம் விழையும் பக்குவப் பண்புகளில் ஒன்று இனிமை. உலகமே இனிமையை நாடுகின்றன. வாழ்வின் ஒவ்வொரு பக்குவங்களிலும் பட்சம் ஒன்று. எனவே இனிமை இதமானது. ஆகவே உயரிய பக்குவப்பண்புகளில் இனிமையை இயேசுநாதர் பரமகம்சர் போன்ற பலரும் விழைந்தனர். இனிமை இன்பம் நல்கும். நல்வாழ்வை நல்கும். எனவே மேதைகள் இன்பத்தை முன்னெடுத்தனர். இன்பம் பெருக்கி இருளகற்றும் நற்குண நற்சீலங்கள் வாழ்வின் அடித்தளங்கள். எனவே இனிமையை உலகினர் ஆதரித்தனர். இன்னலின்றி வாழ பிறரையும் வாழ வைக்க இன்றியமையாதது இன்பம். வள்ளுவனார் இன்பம் என்றோர் பகுதியமைத்தார். எல்லாரும் இன்பத்தையே பெரிதும் விழை-கின் றனர். இன்பத்தின் எதிர்ப் பக்கம் துன்பம். இந்த இனிமை எம்மை வாழ வைக்கும். இனிதம் வாழ்வின் வளம் கொழிக்கும். இனிதம் மனிதம் புனிதம் என்பன உயரிய பண்புகளன்றோ? இதையொரு கணியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. இவ்வண்ணமே புனிதம். புனிதம் ஒரு தூய்மையை சுத்தத்தை ஆன்மீகத்தைத் தரவல்லன. புனிதம் பற்றி எல்லாருமே விமர்சனம் செய்துள்ளனர். அகச் சுத்தம் புறச் சுத்தம் இயல்பானவை. சுற்றுப் புறச் சுற்றாடல் மனிதருக்கு இன்றமையாதன. சுத்தம் சுகம் தரும். அசுத்தம் நோய்க்கு அத்திவாரம். செய்வன திருந்தச் செய்.

சுத்தம் பற்றி மேலும் சிந்திப்போம். மனிதமே இதைப் பற்றிச் சிந்திக்கின்றது. உலக சுகாதார தாபனங்கள் உலகெங்குமுள்ளன. சுத்தம் சுகம் தரும் பல்துறைகளிலே புனிதம் இன்று முன்னுரிமை பெறுகிறது. ஆலயங்களும் சார்ந்த நடைமுறைகளும் புனிதத்துக்கு முன்னிடம் நல்கியுள்ளன. சிலவற்றை எடுத்து ஆள்வோம். சமய மூல நூல்கள் மகத்தானவை. உ+ம்:- ஒவ்வொரு சமயத்துக்கும் தத்துவ நூல்கள் உள. அவற்றைப் பரிசுத்தத்தோடு இணைத்துப் பேசுவர். பரிசுத்த குர்ஆன், பரிசுத்த பைபிள், பரிசுத்த கீதை, பரிசுத்த திரிபீடகம், பரிசுத்த வேதாகமங்கள், பரிசுத்த ஆலயங்கள், தீர்த்தம், தீர்த்தக் கேணி, பரிசுத்த கங்கா தீர்த்தம் இவற்றுக்கு உதாரணங்களாம். ஆகச் சமயங்கள் தூய்மையானவை என்பதை நடைமுறையிலே உணர்வோமாக.

எங்கே தொட்டாலும் எதிலே தொட்டாலும் புனிதம் ஒரு வாழ்வையே உருவாக்கி மறைந்த பின்னும் எல்லார் நாவிலும் பரிமளிக்கவும் செய்கிறது எனலாம்.

ஆபிரகாம் லிங்கன், சாரதாதேவி, அன்னை தெரேசா போன்ற மனிதம் பெண்கள் புனிதத்தின் உரைகல்கமைய வாழ்ந்தனர். இவ்வண்ணம் ஒவ்வொன்றாய் ஆராயும்போது புனிதம் ஒரு வாசனைத் திரவியம் எனலாம்.

நாம் மனிதப் புனிதர்களின் அடிச்சுவட்டிலே சென்று நடந்து காட்டுவோம். நாம் எடுத்தாண்ட எடுகோள்களைத் தினமும் சிந்திப்போம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்ப்பாட்டு அரங்கேற்றம்

### சிவையின் இசைப்பயண முதற் படி



பத்து வருட இசைப் பயிற்சியின் பின் சிவை சுபதரனின் கர்நாடக இசை அரங்கேற்றம் ஜூலை மாதம் 6ம் திகதியன்று மாலை 5:30 மணிக்கு மார்க்கம் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

"நிலா நிலா வா வா" பாடத் தொடங்கியதிலிருந்து இசை ஆர்வம் சிவை சுபதரனைக் கவ்விக் கொண்டது. சிறு வயதிலிருந்தே இசை சம்பந்தமான துறைகளையே சிவை விரும்பித் தேர்ந்தெடுத்தார். கர்நாடக சங்கீதத்துடன் பியானோ, வீணை, கிளாரினெட் போன்ற வாத்தியங்களையும் விரும்பிக் கற்கிறார். ஆரம்பப் பாடசாலையில் இவரது இசை ஆர்வத்தினைக் கண்ட இவரது இசையாசிரியர் இவரை "York Region Children's Choir" சேரச் சிபாரிசு செய்து அதில் பங்கேற்கவும் வைத்தார். ஆரம்பப் பாடசாலையிலிருந்து பட்டம் பெறும் போது இவருக்கு இசை விருது கிடைத்தது. தொடர்ந்து உயர்நிலைப் பாடசாலையிலும் இவ் விருது கிடைத்தது.

பியானோ வாத்தியத்தில் இவரது திறன் கண்டு இவரது ஆசிரியர் இவரை முதல் தடவையிலேயே Royal Conservatory of Music Acadmyஇன் தரம் 2 பரீட்சையையும் பின் தரம் 5 பரீட்சையையும் பின் தரம் 8 பரீட்சையையும் எடுக்க வைத்தார். அதிவிரைவாக மூன்று வருடத்துக்குள்ளேயே Royal Conservatory of Music Academyஇன் தரம் 8 பரீட்சை வரையில் திறமையாகச் சித்தி எய்த வைத்தார்.

பியானோ வாத்தியத்தினை கற்கத் தொடங்கியதிலிருந்து கேள்வி ஞானத்திலேயே தமக்குப் பிடித்தமான பாடல்களைப் பியானோவில் வாசிக்கத் தொடங்கினார். இந்த ஆர்வம் ஆங்கிலத்தில் பாடல்களை எழுதி பியானோவில் இசையமைத்து அதை வாசித்துக் கொண்டு பாடும் ஆர்வத்தினை ஏற்படுத்தியது. உயர் நிலைப் பாடசாலை நிகழ்சியில் தனது சொந்தப் பாடலைப் பாடிப் பியானோவில் வாசித்துப் பலரது பாராட்டுக்களையும் பெற்றார்.

அரும் பெரும் கலையான கர்நாடக இசையை தமது ஆறாவது வயதிருந்து சங்கீத வித்வானும் இசைக் கலைமணியுமான திருமதி பராசக்தி விநாயகதேவராஜாவிடம் கற்று வருகின்றார். தற்போது தமிழிசைக் கலாமன்றத்தின் 6ம் தரப் பரீட்சைக்காக கற்று வருகின்றார். இதை விட வீணை வாத்தியத்திலும் மூன்று தரங்களில் விசேட சித்தியெய்தியுள்ளார். பரத நாட்டியத்தில் தரம் 4 வரையில் சித்தியடைந்திருக்கின்றார்.

## ஐம்பதாண்டு இசைப் பயண முடிவு

### திரையிசையின் தனிக்காட்டு 'ராஜா'



தமிழ் திரை இசையில் மறக்க முடியாத மூன்று ஆங்கில எழுத்துகள் 'ரி.எம்.எஸ்'. பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை என்று சில நேரங்களில் சிலவற்றைக் குறிப்பிடுவதுண்டு. கடந்த 25-ம் தேதி, சென்னையில் மறைந்துபோன ரி.எம்.சௌந்தரராஜனின் குரலுக்கு அது தங்கமாகப் பொருந்தும்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டாகத் தமிழர்களின் காதுகள் அவருடைய குரலோடு வாழ்ந்தன. காதல், சோகம், மகிழ்ச்சி, தாய்மை, வாய்மை, கொள்கை, பக்தி எனத் தமிழனின் ஒவ்வோர் உணர்வோடும் ஒரு பாடலாக நினைவுபடுத்தப்பட்டவர் ரி.எம்.எஸ்.

பாடத் தெரிந்தவர்கள்தான் கதாநாயகர்களாக நடிக்க முடியும் என்பது பாகவதர் காலத்து எழுதப்படாத சட்டம். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் நடிகர்களும் பாடகர்களும் தனித்தனியாகப் பிரிந்தனர். காலம் ஏற்படுத்திய இந்த மகத்தான மாற்றம்தான் எம்.ஜி.ஆர்., சிவாஜி போன்ற இணையற்ற கலைஞர்களுக்குக வழி ஏற்படுத்தியது. அதே நேரத்தில் இணையற்ற அந்த இரண்டு கலைஞர்களின் பாடல்களுக்கும் தன் பின்னணிக் குரலால் உயிர் தந்தவர் ரி.எம்.எஸ்.

சிவாஜி கணேசனுக்கு 'சட்டி சுட்டதடா கைவிட்டதடா' என்றும் 'படைத்தானே.. படைத்தானே மனிதனை ஆண்டவன் படைத்தானே' என்றும் தன்னிரக்கப் பாடல்களில் ரசிகர்களைக் கலங்கவைத்தார். எம்.ஜி.ஆருக்கு 'நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்' என்றும் 'அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்றும் முறுக்கேற்றினார்.

அழுகை, ஆர்ப்பரிப்பு இரண்டுக்கும் பொருந்திய அவருடைய குரல் அந்த இரண்டு நடிகர்களின் அடையாளமாக மாறிப்போனது. பாடலை மட்டும் கேட்டாலும் அது எம்.ஜி.ஆருக்குப் பாடியதா, சிவாஜிக்குப் பாடியதா என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லிவிட முடிவது வேறு எந்தப் பாடகருக்கும் கிடைக்காத பெருமை.

படத்தில் சிவாஜி இரண்டு வேடமோ, (32ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கத்தில் வன்னி வீதி

மார்க்கம் நகரசபையால் வன்னி வீதி கடந்த மாதம் திறக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் இங்கு பிரசுரமாகியுள்ளன. இந்த நிகழ்வு தொடர்பான விபரங்களை இந்த இதழின் ஏழாம் பக்கக் கட்டுரையிலும், இரண்டாம் பக்க ஆசிரிய தலையங்கத்திலும் காணலாம்.










# ரொறன்ரோ குயி
# மே 18 தமிழினப் படு




கன
அ
செ
படு க
எடுக்கப்
இங்கு
(ஒளிப்ப



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யின்ஸ் பார்க் திடலில் திரண்டெழுந்த மக்கள்
# டுகொலை நாள்தான் என்பதை மீளநிரூபித்தனர்

கனடியத் தமிழர் தேசிய
அவையினால் ஏற்பாடு
செய்யப்பட்ட தமிழினப்
டுகொலை நாள் நிகழ்வில்
க்கப்பட்ட சில ஒளிப்படங்கள்
ங்கு இடம் பெற்றுள்ளன.
ளிப்படங்கள்: 'செய்தி' குணா)

































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகாம்பிகை நகை மாளிகை

இப்பொழுது இரண்டு இடங்களில்

## Kanagaambikai Gold House

### Now in Two Locations

சிங்கப்பூர் மற்றும் துபாயிலிருந்து தருவிக்கப்பட்ட 22K தங்க நகைகள்
ராசிக் கற்கள், நவரத்தின மோதிரங்கள், மற்றும் பழைய நகைகளைப் புதுப்பித்துக்
கொள்ளவும் எங்களிடம் வாருங்கள்!




**மார்க்கம் & எக்லின்ரன்**
3160 எக்லின்ரன் அவினியு கிழக்கு
ஸ்காபரோ, ஒன்ராறியோ
**416 269 7197**

**பிறிம்லி & எக்லின்ரன்**
2613 எக்லின்ரன் அவினியு கிழக்கு
ஸ்காபரோ, ஒன்ராறியோ
**416 269 7198**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கூடுகள் சிதைந்தபோது' நூல் அறிமுக விழா






பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்ற எழுத்தாளர் அகிலின் 'கூடுகள் சிதைந்தபோது' சிறுகதைத் தொகுதியின் நூல் வெளியீடு, கடந்த மாதம் 11ஆம் திகதி கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் இ. லம்போதரன், எஸ். சண்முகராஜன், சி. இளஞ்செழியன் ஆகியோரின் வாழ்த்துரையையடுத்து, தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் நயவுரை வழங்கினார். நூலாய்வை பேராசிரியர்கள் யோசப் சந்திரகாந்தன், இ. பாலசுந்தரம் மற்றும் தசிவ பாலு ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் முதற் பிரதி புகழ்பெற்ற மூத்த எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. நூலாசிரியரின் ஏற்புரையுடன் விழா முடிவடைந்தது. விழாவின் சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.







# ஜேர்மனியில் 'பிஞ்சு முகத்தின் தேடல்' நூல் வெளியீடு

ஜேர்மன் வெற்றிமணியின் வெளியீடான மனோன்மணி சண்முகதாஸின் 'பிஞ்சு முகத்தின் தேடல்' நூல் அரங்கேற்றம் அண்மையில் ஜேர்மனியில் தமிழாலயத் தந்தை இரா. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை 'வெற்றிமணி' மற்றும் 'சிவத்தமிழ்' ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரன் நிகழ்த்தினார். இவ்விழாவின் சில ஒளிப்படங்கள் இங்கேயுள்ளன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Est. 1991
www.computek.edu



We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**
**You maybe eligible upto $28,000 to pay for:**
Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**
- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 66



## பரந்தாமனுக்கு பூமாலை சூடி பாமாலை பாடிக் கொடுத்த சுடர்க் கொடியாள்

இளங்கோ அடிகள் பாடிய சிலப்பதிகாரமும் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என வருணிக்கப்படுகின்றன. சிலப்பதிகாரம் கண்ணகி, பாண்டிமாதேவி ஆகிய இருவரின் சிலம்பை மையமாகக் கொண்ட காப்பியம். மணிமேகலை அதன் கதைத் தலைவியான மணிமேகலையின் பெயரால் அமைந்த காப்பியம். கோவலன் தனது குல தெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரைத் தனது மகளுக்குச் சூட்டினான் என சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. பொது நிலையில் மணிமேகலை என்பது ஒருவகை அணிகலன் ஆகும். மகளிர் தம் இடையில் அணியும் நகை மேகலை. இது மணியால் (மாணிக்கம்) செய்யப்பட்டதால் மணிமேகலை எனப்படும்.

சிலப்பதிகார காப்பியத்தின் தலைப்பு சிலம்பின் பெயரால் அமைந்துள்ளது போன்றே, மணிமேகலை காப்பியம் மகளிர் அணியாகிய மணிமேகலையின் பெயரால் அமைந்துள்ளது. மணிமேகலை சிலப்பதிகாரக் கதையின் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது.

இந்தக் காப்பியங்கள் போலவே மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் ஆண்டாளின் திருப்பாவையும் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் இளம் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி, கூட்டமாய் கூடிக் குளத்தில் நீராடி, பாவை வைத்து வழிபாடு நடத்தி பாவை விரதம் அனுட்டிப்பதைக் கூறுகின்றன.

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்துக்கு ஒன்பது நாள்களுக்கு முன் தொடங்கி சைவ சமயத்தவரால் கடைப்பிடிக்கப்படும் நோன்பாகும். இந்நோன்பைக் கன்னிப் பெண்களே கூடுதலாகக் கடைப்பிடிப்பர். இக்காலத்தில் கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து தம் தோழியரையும் அழைத்துக் கொண்டு நீர் நிலைகளுக்குச் சென்று நீராடி அருகில் உள்ள சிவன் கோயிலுக்கு சென்று இறைவனைத் துதித்து வழிபடுவர். திருவெம்பாவை பாடல்களை கோயில்களில் பாடுவது வழக்கம். சிவகாமி உடன் இருக்கும் சிவனைக் கண்டு அங்கு நடைபெறும் வழிபாட்டில் பங்குபற்றுவர்.

திருப்பாவை நோன்பு காலத்தில் கன்னிப் பெண்கள் திருப்பாவை பாசுரத்தில் இரண்டாம் பாடலில் கூறியபடி நெய் மற்றும் பால் உண்ணாமலும், கண்ணுக்கு மையிடுதல், தலையைச் சீவி முடித்து மலர்களைச் சூட்டிக்கொள்ளுதல் முதலிய அலங்காரங்களைச் செய்யாமலும், தகாதனவற்றைச் செய்யாதும், நற்செயல்களில் ஈடுபட்டு எந்நேரமும் இறை சிந்தையுடன் நோன்பை கடைபிடிப்பர்.

பாவை நோன்பு பற்றி சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. அதனை "மார்கழி நோன்பாகிய தைந்நீராடல்" என பழந்தமிழர் அழைத்தனர். பரிபாடலில் வைகை ஆற்றின் சிறப்புக் கூறும் பாடலிலே ஆசிரியர் நல்லந்துவனார் "தாயருகா நின்று தவத்தைந் நீராடுதல் நீயுரைத்தி வையை நதி" என்று பாடுகிறார்.

பாவை நோன்பு ஆண்டு தோறும் மார்கழி மாதம் சைவசமயக் கன்னிப் பெண்கள் கடைபிடிக்கும் நோன்பாகும். ஆற்றங்கரையில் பாவை நோன்பு நோற்று அந்தத் திருமாலையே கணவனாகப் பெறுவோம் வாருங்கள் என்று ஆண்டாள் அழைக்கும் பாடல்கள் திருப்பாவை. இந்நாள்களில் அதிகாலை எழுந்து நீராடி தூய ஆடை அணிந்து அவரவருக்கு விருப்பமான கோயிலுக்கு சென்று இறை வழிபாடு செய்வர். இப்பாவை விரதமானது மழை பெய்து நாடு நலம் பெறவும், தமக்கு நல்லபடி திருமணம் நடைபெறவும் பெண்களால் கடைப்பிடிக்கப்படுவது பழங்கால வழக்கம்.

திருவெம்பாவை பாடல் நாயகன் சிவன். திருப்பாவை நாயகன் திருமால். திருவெம்பாவை 20 பாடல்களைக் கொண்டது. திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டது. சிவனது அருமை பெருமையை திருவெம்பாவை எடுத்துக் கூறுகிறது. திருமாலின் அருமை பெருமையை திருப்பாவை அருளுகிறது.

திருவெம்பாவை, திருப்பாவை இதில் எது முந்தியது எது பிந்தியது என்பது தெரியவில்லை. மாணிக்கவாசகர் - ஆண்டாள் இருவருமே ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்று துணியப்படுகிறது. திருப்பாவையில் வெள்ளியெழுந்து வியாழன் உறங்கிற்று என்ற ஓர் அடிவருகிறது. அது கிபி 885 என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இரண்டுக்கும் சிறு வேற்றுமை இருக்கிறது. மாணிக்கவாசகர் ஆண். ஆனால் பெண்களைப்போல கற்பனை செய்து திருவெம்பாவையைப் பாடியிருக்கிறார். ஆண்டாள் பெண். பெண்ணாகிய ஆண்டாள் தானே பிறரை எழுப்புவது போலப் பாடியிருக்கிறார். ஆண் பெண் வேடம் போடுவதைக் காட்டிலும் பெண்ணே பெண்ணாக வருவது இயற்கையாக இருக்கிறது. ஆண்டாளுக்கு சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாள்! கோதைப்பிராட்டி, சூடிக்கொடுத்த நாச்சியார், கரும்பார் குழல் கோதை என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

திருப்பாவையில் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் தெளிவாக எடுத்துக்கூறப்படுகிறது. மாணிக்கவாசகர் - ஆண்டாள் இருவரது நோக்கங்களும் ஒன்றாக இருந்தாலும் திருவெம்-பாவையில் பக்தி அதிகமாகவும் திருப்பாவையில் இலக்கிய நயம் அதிகமாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

பொதுவாக நாயன்மார்களின் தேவார திருவாசகங்களை விட ஆழ்வார்களின் நாலாயிர திவ்ய பிரபந்தம் எளிமையாகவும் இனிமையாகவும் அமைந்துள்ளது.

அதிலும் சிறப்பாக பரந்தாமனுக்கு பூமாலை சூடிக்கொடுத்ததன்றிப் பாமாலையும் பாடிக் கொடுத்தவர் ஆண்டாள். திருப்பாவை தித்திக்கும் தேன் தமிழில் "பக்திச் சுவை சொட்டச் சொட்ட முத்திப்பதம் கிட்டக் கிட்டப்" புனையப்பட்டுள்ளது. நறுமணம் வீசும் சொல் மாலை

➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாவை. அதில் செந்தமிழின் சுவையை, பக்தி கரைபுரண்டோடும் காதல் வெள்ளத்தை, கவிதை இன்பத்தை காணலாம்.

பக்தி இலக்கியங்களில் பெரும்பான்மை நாயக நாயகி பாவத்தில் அமைந்துள்ளன. ஆண்டவன் இயக்க உலகம் இயங்குவதால் அவனை நாயகனாகவும் தம்மை நாயகிகளாகவும் சித்திரித்து அந்த உறவின் மூலம் பக்தர்கள் பேரின்பத்தைக் கண்டார்கள்.

ஆண்டாள் இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவித்துப் பாடியிருக்கிறார். அவரது பாடல்கள் அகப்பொருள் இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் "என்தட முலைகள், மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய்!"

ஆண்டாள், ஆண்டவனை நாயகனாக எண்ணி உறவாடி மகிழ்ந்தது தெய்வீகக் கற்பனையாகும். இதனை ஆண்டாள் பாடிய திருப்பாவை (30) மற்றும் நாச்சியார் திருமொழி (143) இரண்டிலும் பரக்கக் காணலாம்.

வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி,
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப,
ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென்று
உன்னித் தெழுந்தவென் தடமுலைகள்,
மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே. (நாச்சியார் திருமொழி - முதலாம் திருமொழி பாடல் 5)


மன்மதனே! சுவர்க்க உலகில் வாழ்கின்ற தேவர்களுக்கு செய்த வேள்வியில் படைத்த நெய்யையும் இன்ன பிற பண்டங்களையும் காட்டில் திரிகின்ற நரி எப்படி வேள்விக்குண்டத்தின் குறுக்கும் நெடுக்கும் பாய்ந்து, மோப்பம் செய்து, நக்கி உண்டு கெடுப்பது போல் தனது திருமேனியில் சக்கரத்தையும் சங்கையும் அணிந்துள்ள உத்தமர்க்கு என்று ஆதரவுடன் கிளர்ந்த எனது பருத்த தனங்களை அவனைத் தவிர மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன் கண்டாய்! (அவி - தேவர் உணவு) இதனால் ஏனைய ஆழ்வார்களைவிட ஆண்டாளுக்கு வைணவர்கள் அதிக ஏற்றத்தை கொடுத்திருக்கிறார்கள்.

(தொடரும்)●


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

மாதாந்தம் தபாலில் பெற
416 920 9250
tamilsinfo@sympatico.ca







கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அறலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

HEAVEN CARES

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: Vilosan Sivatharman B.Eng

Funeral Counsellor

416-431-3600 Ext:1

Call: Christeen Seevaratnam

Funeral Counsellor

416-431-3600 Ext:2







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high with your thoughts

PRO MAR Ltd.




O Corporate Awards
O Promotional Products
O Laser Engraving
O Pad Printing
O Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!




One stop for all your promotional needs.

PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

***Why think so long...?***



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

Vivek Subramaniam
Sales Representative
416-898 4846


**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# Life is going on!! ..... If any thing goes!!!!........!. IPL Cricket ????

ஐபிஎல். கிரிக்கெட்டை முன் வைத்து ஏகப்பட்ட சர்ச்சைகள் கிளம்பின. கடைசியாக 2009 சூதாட்ட புகாரில் சிக்கி சஸ்பெண்ட் செய்யப்பட்ட 4 வீரர்கள். இந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் உட்பட 3 பேர் சிக்கியுள்ளமை, ஆகியன ஐபிஎல். என்ற கிரிக்கெட்டின் இமேஜின் மீது கரி பூசினாலும் ரசிகர்களின் பொழுது போக்கு மனோநிலையில் எந்த வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை.

சூதாட்டப்புகார் எழுந்த ஸ்ரீசாந்த் கைது செய்யப்பட்ட, அன்றே நடைபெற்ற போட்டியில் ஏகப்பட்ட கூட்டம், ரசிகர்களின் சுரணையற்ற ஆரவாரம்! வர்ணனையாளர்கள் வழக்கம்போல் சீரியஸாக கிரிக்கெட் பகுப்பாய்வில் ஈடுபட்டது அனைத்தும் மிகவும் அருவருப்பாகவே அமைந்தன. ஆனால் ரசிகர்களுக்கு, மக்களுக்கு? சுரணை மழுங்கடிக்கப்பட்டது.

'சன் ரைசர்ஸ்' போட்டியில் ஒரேயொரு ஒல்லியான பதின்ம வயது நபர் ஒருவர் ஸ்ரீசாந்திற்கு எதிராக போஸ்டரைக் காண்பித்தார். பிறகு அவரும் ஆரவாரக் கும்பலுடன் ஐக்கியமானார்.

முதலில் ஒரு போட்டி பிக்சிங் செய்த போட்டியா, யார் வெற்றி பெறவேண்டும் என்பது முதலிலேயே தீர்மானிக்கப்பட்ட போட்டியா என்ற இடையூறுகள் இல்லாமல், சந்தேகமற எப்படி ஐயா கிரிக்கெட்டை 'ஜாலியாக எஞ்ஜாய் செய்ய முடியும்?' பொதுவாக ரசிகர்களின் பொழுதுபோக்கு வக்கிர மோகத்தின் ஒரு தெறிப்பே கருத்தும். இதில் என்ன விமர்சனச் சிந்தனை வந்துவிடப்போகிறது?

பல மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் நாட்டின் தேர்தல்களே ஏதோ ஒரு மிகப்பெரிய தொலைக்காட்சி பொழுது போக்காகவும் இடங்கள், தொகுதிகள் ஆகியவற்றின் வெற்றி எண்ணிக்கை என்ற நம்பர் பித்தும் பிடிக்க வைக்கப்படுகிறது. ஐபிஎல். நம்பர் கேம், தேர்தல் நம்பர் கேம்! அனைத்தையும் தீர்மானிப்பது தொலைக்காட்சி பிம்பம், மைதானத்தில் நேரில் சென்று கிரிக்கெட் வீரர்களை நேரடியாக தரிசனம் செய்யும் ஆளுமை, வழிபாட்டு மோகம் என்று மக்கள் மனோநிலை இருக்கும்போது சூதாட்டம், ஊழல் என்பன பற்றியெல்லாம் இந்த மந்தைக்கு என்ன பிரக்ஞை வந்து விடப்போகிறது.

இன்று இந்தப் பிரச்சனை நாளை வேறொரு பிரச்சனை வந்தால் இதனை மறந்து விடுவார்கள். ஆனால் இந்தப் போக்கை வேதனை தருவதாகக் கருதுவதில்லை. அது அப்படி என்றால் அப்படித்தான்! அதுதான் வாழ்க்கை, எது எப்படியிருந்தால் என்ன? எவன் செத்தால் என்ன வாழ்ந்தால் என்ன? Life is going on!!.... If any things goes!!! என்ற ஒரு விதமான மத்தியதர அல்லது உயர் மத்தியதர கவலையற்ற வாழ்வு கொடுக்கும் அசாத்திய பாதுகாப்பு உணர்விலிருந்து வெளியே வரும் வார்த்தைகள்தான் இந்த லைஃபை எஞ்ஜாய் பண்ணுங்க, கிரிக்கெட்டை எஞ்ஜாய் பண்ணுங்க என்பதெல்லாம்!

தவறுகளை ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் விரக்தியுடன் ஏற்றுக் கொண்டு வெறுப்பில் வாழ்க்கையைத் தொடரும் ஒரு மனோ நிலை போய், இன்றைய உலகமயமாதல் உருவாக்கியுள்ள புதிய பிந்தேசிய-மத்தியதரவர்க்க-மேட்டுக் குடி மனோநிலை எந்த வித ஊழலையும், அக்கிரமத்தையும் கண்டுக்காதீங்க எஞ்ஜாய் பண்ணுங்க என்பதெல்லாம்! இதற்காகத்தான் ஜக்கி வாசுதேவ் இருக்கிறார். வாழும் கலை ஓதும் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் இருக்கிறார். இதில் ஸ்ரீசாந்த் விவகாரம் என்ன ஆகிவிடப்போகிறது?

மக்களின் சுய-விமர்சன சிந்தனைகளுக்கான சாத்தியப்பாடுகளை மழுங்கடித்து ஒரு விதமான பரபரப்பு மனோநிலையை ஏற்படுத்தி பிறகு அதனையும் மழுங்கச் செய்து பிம்பங்களின் தொடர் வரிசைகளை திரையில் காண அதன் முன் வாய் மூடி மௌனியாக பார்வையாளர்களை அமர வைத்து சிந்தனை என்ற ஆற்றல் உள்ள தனி மனிதர்களை மந்தைகளாக ஆக்குகிறது இன்றைய ஊடகம். இண்டெர்னெட், தொலைக்காட்சி, ஃபேஸ்புக், டுவிட்டர், யூ டியூப் என்று மின்னணு ஊடகங்களின் ஜீவிகளாகிவிட்டோம் நாம்! இதிலிருந்து மீண்டு அன்னியமாகி விமர்சனச் சிந்தனைகளை வளர்த்தெடுக்க மற்று சிந்தனைகளை, தத்துவங்களை கற்க முன்வரவேண்டும்.

அதற்கான சூழல்கள் அமைத்துத் தரப்படாத நிலையில் ஐபிஎல்-ஐ ரசிக்கும் மனோ நிலை, அதாவது வாழ்க்கையை அனுபவிக்கும் மனோ நிலையே, எருமைமாட்டு மனோ நிலையே நமக்கு சாத்தியமாகும்.●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®

You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

# வீடு வாங்க விற்க



## ஈசன் குலசேகரம்
Sales Representative

**416 835 1700**

info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

RE/MAX

RE/MAX Vision Realty Inc., Brokerage

## விக்கி வேலாயுதன்
Sales Representative

**416 457 7162**

vvelauthan@yahoo.com



அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..


**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

**www.esanhomes.com**

2210 Markham Road # 1, Toronto, ON M1B5V6




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

76

இம்மாதக் கட்டுரை கனடாவின் வேலையில்லாப் பிரச்சனையும் (Unemployment) தகமைக்கேற்ப தொழில் கிடைக்காமையும் (Underemployment) பற்றிய ஒரு பார்வையாக அமையப் போகின்றது.

2013 ஆம் ஆண்டு பங்குனி மாதம் கனடா புள்ளி விபரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி 55,000 வேலையிழப்புகள் காணப்பட்டதாக கூறுகின்றது. ஆனால் அதற்கு முந்திய மாதத்தில் அதாவது (Feb 2013 மாதத்தில்) 51,010 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரம் கூறுகின்றது. இதனால் வேலையற்றோர் விகிதாசாரம் நீண்ட காலமாக 7% க்கு குறையாமல் இருப்பது பொருளியலாளர்கள், சமூக அரசியல் ஆவலர்களை கவலைக்கு உள்ளாகியுள்ளது. இருப்பினும் சிலர் தற்பொழுதுள்ள உலகப் பொருளாதார சூழலுடனும் அமெரிக்க பொருளாதாரத்துடனும் ஒப்பிட்டுப்பார்க்கையில் திருப்தியானதாக இருப்பதாக கூறுபவர்களும் உண்டு. அவர்களின் பார்வையில் 2009, 2010 ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையிலும் திருப்தியாக இருப்பது கவலைப்படவேண்டிய அவசியம் கிடையாது. 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் பின்னர் அதிலிருந்து மீள்வது உலக நாடுகளுக்கு பெரும் சவாலாக இருக்கும் நிலையில் எமது நாட்டின் வளர்ச்சி மந்தப் போக்கிலாவது இருப்பது ஒரு நம்பிக்கை தருவதாக இருப்பதாக கூறுபவர்களும் உண்டு.

ஆனாலும் இளையவர்களின் (வயது 15-25 இடைப்பட்டவர்கள்) வேலையில்லதோர் விகிதம் 14% இல் இருப்பது திருப்தியளிக்கக்கூடிய விடயம் அல்ல. நீண்ட காலம் தொடர்ந்து வேலையில்லாமல் இளம் சமூகத்தினர் இருக்கும் போது அவர்க்ள் உயர் கல்விக்காக பெற்ற கடன்கள் கட்ட முடியாமல் கஸ்டப்படுகிறார்கள். உளவியல் ரீதியாக தன்னம்பிக்கையை இழக்கின்றார்கள். எமது கலாசாரத்தில் அவர்கள் பெற்றோருக்கு பொருளாதார ரீதியில் பாரமாக இருக்கிறார்கள். இதன் தொடர்ச்சி பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் பிரச்சனை உருவாக காரணமாகவும் அமையும்.

இப்படியான சூழ்நிலை இருக்கின்ற நிலையில் இளையோர் தமது கடன்களை திரும்ப செலுத்த வேண்டும் என்கின்ற நிலையில் தாம் பெற்ற கல்விக்கேற்ற தொழிலை தேடுவதனை விடுத்து கிடைக்கும் தொழிலை செய்வோம், ஊதியம் குறைவாக இருந்தாலும் பிரச்சனை இல்லை என்கின்ற முடிவு எடுத்து அப்படியான வேலைக்குச் செல்லும் போது underemployment எனச் சொல்லப்படுகின்றது.

கனடாவுக்கு புதிய குடிவரவாளர்களாக வருபவர்களுக்கு இருக்கின்ற மொழித்தடை (Language barrier) கனடிய வேலை அனுபவமின்மை போன்ற காரணங்கள் எமது சமூகத்தில் பலரை இந்த நிலைக்குத் தள்ளியுள்ளது. நீண்ட காலத்தில் இதனை முறியடித்து ஜெயித்தவர்களும் உண்டு. ஒரு சிலர் மன நோயாளியாக மாறியுள்ளதையும் நான் கண்டுள்ளேன். பலர் நாட்டின் சூழலுக்கு ஏற்ப நம்மை மாற்றி அமைத்து மகிழ்ச்சியாக வாழ்கின்றவர்கள் கூடுதலான சதவிகிதமாக இருக்கிறார்கள்.

ஆனால் இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயம் எமது இரண்டாவது தலைமுறையின் அதாவது இங்கு பிறந்து வளர்ந்து இங்கு கல்வி கற்று நாட்டின் பொருளதார சூழல் காரணமாக இப்படியான "Underemployment" சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதினை எமது கல்வியாளர்களும், சமூக ஆர்வலர்களும், பெற்றோர்களும் மற்றும் தமிழ் சமூகத்தின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள அமைப்புகளும் ஆய்வுகளையும், கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு இதற்கான மாற்று வேலைத்திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
**416 261 4737**

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
**416 266 3077**

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**

## மன அழுத்தம் என்னும்....

- கை கால்களைத் தளர்ச்சியாக நீட்டியபடி படுத்திருங்கள்.
- இப்பொழுது பாதத்திலிருந்து ஒவ்வொரு உறுப்பாக மனத்தில் நினைக்க வேண்டும்.
- முதலில் கால் பெருவிரல்களில் ஆரம்பியுங்கள்.
- அவற்றை தளரச் செய்யுங்கள்.
- அவை ஆரோக்கியமாக நல்ல நிலையில் இருப்பதாகவும் நன்றாகச் செயற்படுவதாகவும் நினைத்து மனதைச் சாந்தப்படுத்துங்கள்.
- பின் அருகில் உள்ள ஏனைய விரல்களையும் தளரச் செய்து அவை பற்றி முற் கூறியவாறு நினைத்துச் சாந்தப்படுங்கள்.
- பாதம், கணுக்கால், கெண்டை, முழங்கால், தொடை, பிறப்புறுப்புகள், அடிவயிறு, மேல் வயிறு, இருதயம், நெஞ்சறை, கைகள், கழுத்து, தாடை, முகம், காது, மூக்கு, கண், நெற்றி, தலை எனப் படிப்படியாக மேல் நோக்கித் தளர்த்திச் செல்லுங்கள்.
- இறுதியாக மூளையையும் அவ்வாறே தளரத்தி அமைதி கொள்ளுங்கள்.

இது ஒரு ஆனந்த நிலையைக் கொடுக்கும். சில நிமிடங்கள் அவ்வாறு அமைதியாகப் படுத்து இருங்கள். பின்னர் உங்கள் உடல் உறுப்புகளை மெதுவாக இயக்கி எழுந்திருங்கள்.
உங்களுக்கு உகந்த முறையைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து செய்து வாருங்கள். மன அழுத்தத் தொல்லையிலிருந்து விடுபட்டு உடல் நலமும் உள நிறைவும் பெற்று வாழ முடியும்.●

## பீட்ரூட் சாறு உயர் ரத்தஅழுத்தத்தை தணிக்கிறது

பீட்ரூட் சாறு மனிதர்களின் உயர் ரத்த அழுத்தத்தை தணிக்கவல்லது என்று மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு தேநீர் கோப்பை அளவு, அதாவது சுமார் 250 மிலி லிட்டர் பீட்ரூட் சாறு குடித்தால் ஒருவரின் உயர் ரத்த அழுத்தம் சுமார் 10 எம் எம் அளவால் குறைவதாக லண்டன் மருத்துவக் கல்லூரியும் பார்ட்ஸ் சுகாதார மையமும் இணைந்து நடத்திய ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. பதினைந்து பேரிடம் நடத்திய ஆய்வின் முடிவில் ஒரு சிலருக்கு அவர்களின் உயர் ரத்தஅழுத்தம் சாதாரண அளவுக்கு குறைந்ததாகவும் இந்த ஆய்வாளர்கள் தெரிவித்திருப்பதாக, மருத்துவ சஞ்சிகையான ஹைபர்டென்ஷன் தெரிவிக்கிறது.

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**
**சிவா
கணபதிப்பிள்ளை**
**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

# வாழ்நாள் பேராசிரியர் கா. சிவத்தம்பி 'ஆய்வியல் ஆளுமை' கருத்தரங்கு

தமிழிலக்கிய உலகின் முதன்மையானவர்களில் முக்கியமான ஒருவராக மதிக்கப்படும் வாழ்நாள் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் 81வது பிறந்த நாளை முன்னிட்ட சிறப்புக் கருத்தரங்கொன்று கடந்த மாதம் பத்தாம் திகதி ஸ்காபரோவில் நடைபெற்றது. பேராசிரியரின் நண்பர்களாலும் இலக்கிய அன்பர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வரங்கில் 'பேராசிரியரின் ஆய்வியல் ஆளுமை' என்னும் தலைப்பிலான கருத்துப் பரிமாறல் இடம்பெற்றது. சிறிய கூட்டமாயினும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் பேராசிரியர் மீதான பார்வை விமர்சிக்கப்பட்டது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐம்பதாண்டு இசைப்பயண...

மூன்று வேடமோ ஏற்று நடித்திருந்தாலும் அவர்களுக்கான குரல் வித்தியாசங்களைக் காட்ட வல்லவர் டி.எம்.எஸ். 'திரிசூலம்' படத்தில் அப்பா, இரண்டு மகன்கள் வேடத்தில் சிவாஜி நடித்தார். அந்த மூவருக்குமான குரல் வித்தியாசம் அத்தனைப் பொருத்தமாக அமைந்திருந்தது.

எம்.ஜி.ஆர்., சிவாஜி தவிர எஸ்.எஸ்.ஆர்., என்.டி.ஆர்., ராஜ்குமார், ஜெமினி, ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், கமல், ரஜினி, விஜயகாந்த் என மூன்று தலைமுறை நடிகர்களுக்கும் பாடியவர் டி.எம்.எஸ்.

'உன் கண்ணில் நீர் வழிந்தால்..', 'யார் அந்த நிலவு?', 'பாட்டும் நானே பாவமும் நானே', 'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே கண்ணா', 'அன்புள்ள மான்விழியே', 'இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன்', 'நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராஜா' போன்ற அவருடைய ஒவ்வொரு பாடலையும் ரேடியோவிலும் இசைத் தட்டிலும் கேட்ட அந்தத் தலைமுறைக்குத்தான் தெரியும் அவை ஒவ்வொன்றும் பாடல்கள் இல்லை் பாடங்கள் என்பது.

அவர், ரேடியோ காலத்து ராஜா. தமிழகம் மட்டுமின்றி உலகில் தமிழர்கள் வாழ்ந்த எல்லா இடத்திலும் ரசிகர்கள் இருந்தனர். குறிப்பாக, இலங்கையில் அவருக்குப் பெரும் ரசிகர் கூட்டம் இருந்தது. டி.கே.ராமமூர்த்தி, பி.பி. சிறினிவாஸை அடுத்து ரி.எம்.எஸ். என்ற இசை மலரும் உதிர்ந்துவிட்டது.

ரி.எம். சௌந்தரராஜன் இறுதியாத்திரைக்கு அவரது ரசிகர்கள், சென்னை மந்தவெளி வெஸ்ட் சர்க்குலர் சாலையில் உள்ள ரி.எம்.எஸ். வீட்டு முன்பு குழுவாகச் சேர்ந்து, அவர் பாடிய சோகப் பாடல்களைப் பாடி நினைவு கூர்ந்தனர்.

பிரபலங்கள் அவ்வளவாக தலைகாட்டாத குறையை அவருடைய ரசிகர்கள் திரண்டுவந்து தீர்த்துவைத்தனர். சினிமா, அரசியல் துறைகளில் இருந்து பலர் இவருடைய இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளாதது பெரிய ஏமாற்றம்.●

## வரி விலக்கு நீக்கத்தால் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு வரவுள்ளது

சில வெளிநாடுகளுக்குக் கனடா வழங்கியிருந்த வரிச்சலுகை 39 ஆண்டுகளுக்குப் பின்னர் நீக்கப்படுகின்றது. இதனால் சில முக்கிய பொருட்களான துணி வகைகள், காலணிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், மின்னியல் உபகரணங்களின் வரிவிலக்கு நீக்கப்படுவதால் இவற்றின் விலை கணிசமான அளவு உயரவுள்ளது.

இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில், தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு 1974ஆம் ஆண்டிலிருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையை கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி

மனிதனின் மூளையில் ஒருவருக்கு வயதாவதை அதாவது ஒருவர் முதுமை அடைவதைக் கட்டுப்படுத்தும் பகுதியை தாம் கண்டுபிடித்துவிட்டதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.
எலிகளில் செய்யப்பட்ட தொடர்ச்சியான ஆய்வுகளில் மூளையின் இந்தப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், அந்த எலியின் வாழ்வுக்காலத்தை நீடிக்கவும், குறைக்கவும் செய்யும் என்று அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

'நேச்சர்' என்னும் சஞ்சிகையில் இந்த ஆய்வு குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.
மூளையில் ஆழமாக இருக்கின்ற ஒரு சிறிய கட்டமைப்புக்கு ஹைபோதலமஸ் என்று பெயர்.
வளர்ச்சி, இனப்பெருக்கம் மற்றும் உயிரியல் மாற்றங்கள் ஆகியவவை தொடர்பில் இந்தப் பகுதி ஒரு பெரும் பங்கை ஆற்றுகிறது. ஆனால், அதுதான் ஒருவருக்கு வயதாவது தொடர்பிலும் பெருமளவு சம்பந்தப்பட்டிருகிறது என்று இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது.

எலிகளின் மூளையின் இந்தப் பகுதியை அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானிகளின் குழு ஆராய்ந்தது.

வயதாகச் செய்யும் இரசாயனம்
அந்தப் பகுதியில் உள்ள ஒரு இரசாயனத்தைத் தடுத்தால் அந்த எலி நீண்ட நாட்களுக்கு வாழ்வது கண்டறியப்பட்டிருக்கிறது. ஆரோக்கியமான ஒரு எலி 600 முதல் 1000 நாட்கள் வரை உயிர் வாழும்.

ஆனால், இந்த மாற்றம் செய்யப்பட்ட எலி அதனைவிட ஐந்தில் ஒரு மடங்கு அதிகமான காலத்துக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் வாழ்ந்தது. அதற்கு வயதான காலத்தில் வரும் தசைகள் சுருங்குதல், ஞாபக மறதி போன்ற எந்தப் பிரச்சினையும் வரவில்லை. அதேவேளை, அந்த ஹைபோதலமஸ் பகுதியில் அந்த இரசாயனத்தை விஞ்ஞானிகள் அதிகரித்தபோது, அந்த எலிகளின் வாழ்வுக் காலம் குறைந்து போயிற்று.

அந்த நடைமுறையின் பின்னணியில் உள்ள உயிரியல் பொறிமுறையைப் புரிந்துகொள்வதற்கு தற்போது விஞ்ஞானிகள் முயற்சி செய்கிறார்கள்.

இந்த ஆய்வுகள் முதுமையுடன் தொடர்புடைய பல நோய்கள் குறித்த புதிய தகவல்களை அறிய உதவும். அத்துடன் எதிர்காலத்தில் எமது வாழ்வுக் காலத்தை அதிகரிப்பதற்கான மருந்துகளை தயாரிக்கவும் இது உதவலாம். (நன்றி: பி.பி.சி)

அர்ச்சனாஸ் & கோ
அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்
பூஜைப்பொருட்கள், பூ, பூமாலைகள்,
மல்லிகைச்சரம், பரதநாட்டிய ஆடை ஆபரணங்கள்,
HD Video & Photography, Tamil Movies,
கர்நாடக CDs, DVDs, Passport & ID Photo
'உங்கள் இல்லந்தோறும் இறையருள் பெற'
416-292-0033 www.archanas.ca
2950 Kennedy Rd. Unit 10A Scarborough (One Block North of Finch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகம் பேசப்படும் சொல் 'லைக்' - Like
## அதிகம் எழுத்துப் பிழைவிடும் சொல் 'பிக்கோஸ்' - Because

உலகளவில் ஆங்கிலம் பேசும் 18 வயதிற்குக் குறைவான இளைஞர்கள் 70 வயதைத் தாண்டியவர்களைவிட 5 மடங்கு அதிகமாக லைக் (like) என்ற பதத்தை தமது உரையாடல்களில் பயன்படுத்துகின்றனர்.

இதேவேளை உலகளவில் அதிக தடவைகள் எழுத்துப்பிழை விடப்பட்ட சொல்லாக பிக்கோஸ் (Because) என்ற பதம் உள்ளது. அதேவேளை ஹேற் (Hate) என்ற பதத்தினைவிட ஆறு மடங்கு அதிகமாக லவ் (Love) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கேம்பிறிட்ஜ் ஆங்கில திரட்டின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் எழுத்துப் பிழையாக எழுதப்பட்ட சொற்கள் பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் பிக்கோஸ் (Because), விச் (Which), அக்கொமடேசன் (Accomodation), அட்வர்டைஸ்மென்ட் (Advertisement), மற்றும் பியூட்டிபுல் (Beautiful) ஆகிய சொற்கள் உள்ளன.

கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக அச்சகத்தினால் கேம்பிறிட்ஜ் ஆங்கிலத் திரட்டு உருவாக்கப்பட்டிருந்தால், அதனை A 4 தாளின் ஒரு புறத்தில் அச்சிடப்பட்டு பிரிட்டனின் உயரமான கட்டடமான (600 மீற்றர்) கோபுரம் ஒன்றின் உச்சியிலிருந்து முழுமையாக அதனை ஒட்டலாமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பல பில்லியன் சொற்களைக் கொண்ட கேம்பிறிட்ஜ் ஆங்கில திரட்டானது பேச்சு, எழுத்து, வர்த்தகம், கல்வியாளர்கள், மாணவர்கள் மற்றும் இ.மொழி ஆகியவற்றில் ஆங்கிலம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றதென்பதனை தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றது.

(நன்றி - ரைம்ஸ் ஒவ் இந்தியா)

## குறுநடை காலத்தில் வாசிப்பை ஆரம்பிக்கலாம்

உங்கள் குழந்தை குறுநடை போடுகிறது என்ற ஆனந்தத்தில் இருக்கிறீர்களா? விழுந்துவிடுவானா எதையாவது போட்டு உடைப்பானா எனப் பெற்றோர்கள் திகிலில் இருக்கும் காலமும் அதுதான்.
குறுநடைபோடும் காலம் என்பது பொதுவாக ஒன்று முதல் மூன்று வயது வரை எனக் குறிப்பிடுகிறார்கள்.

குறுநடைபோடும் காலமானது குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு மட்டும் முக்கியமானதல்ல.
அது குழந்தைகளின்
- அறிவாற்றல்,
- உணர்ச்சிகளின் வெளிப்பாடு
- சமூக உறவுகளின் விரிவு

போன்றவவை வளர்வதற்குமான மிகவும் முக்கிய காலப்பகுதியாகும்.


இக்காலத்தில் வாசிப்பதானது அவர்களது கற்கை ஆற்றலையும், அறிவு வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். இக்காலத்தில் அவர்களை வாசிக்க தூண்டுவதானது அவர்களை வாழ்நாள் முழுவதும் வாசிப்பில் ஆர்வம் கொள்ள ஊக்குவிப்பதாக அமையும் என American Academy of Pediatrics சொல்கிறார்கள்.

- குழந்தையைக் கட்டித் தழுவி அமைதியும் சௌகர்யமும் நிறைந்த இடத்தில் குழந்தையுடன் கூடியிருந்து வாசியுங்கள்.
- உங்கள் குழந்தை தவறாக உச்சரிக்கும் வார்த்தைகளைக் கவனத்தில் எடுத்து அவற்றை சரியான முறையில் நீங்கள் உச்சரித்து குழந்தையை அவதானித்து முயற்சி செய்து முன்னேற உதவுங்கள்.
- வாசிப்பதை தெளிவாக மட்டுமின்றி மிகவும் ஆறுதலாகவும் செய்வதன் மூலம் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை குழந்தை புரிந்து கொள்ள உதவ முடியும்.
- குழந்தை உற்சாகமற்று சோர்வாக இருக்கும் நேரங்களில் குழந்தையை அமைதிப்படுத்தி ஆற்றுப்படுத்தி மகிழ்ச்சியில் ஆழ்த்த வாசிப்பு நேரங்களைப் பயன்படுத்தலாம்.

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
Scholarship Plan [RESP]
Any Referral Service
• Credit Counseling • Accounting & Tax Services •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classess




## Successful Real Estate Office With Over 300 Salespeoples

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- 90:10 Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**

*Based on TREB data: 2010. (does not include independent or other franchisors). ©2010 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**